# வணக்கத்துக்குரிய குற்றம்

## 1



அது ஒரு சுமாரான லாட்ஜ்.

சுத்தத்தை மறந்து போயிருந்த சுவர்கள். கொஞ்சம் டிப்டாப்பான பேர்வழிகளை உள்ளே நுழையத் தயங்க வைக்கும். அழுக்கு மேல் சட்டை மாதிரி அணிந்திருந்த போர்டு எம்.சி. லாட்ஜ் என்ற எழுத்துகளை சிரத்தை இல்லாமல் அறிவித்துக் கொண்டிருந்தது.

'டொக்.. டொக்..'

பதினெட்டாவது அறை தட்டப்பட்டபோது உள்ளே கட்டிலில் படுத்திருந்தவன் சாவகாசமாகக் கதவைத் திரும்பிப் பார்த்தான். கையில் இருந்த புகை ததும்புகிற சிகரெட்டை இரும்பு கட்டிலின் விளிம்பில் தேய்த்து அணைத்தபடியே.. "யாரு?" என்றான்.

"நான்தான் சார்.." என்றபடியே உள்ளே ஒரு அரை டிராயர் பையன் வந்தான். பிஞ்சிலேயே பழுத்த ஞானம் முகத்தில் பிரேம் போட்டுத்

- ராஜேஷ்குமார்

தொங்கிக் கொண்டிருந்தது.

"இந்தாங்க சார் நீங்க கேட்ட ஆல்பம்.."

செவ்வக சைஸில் ஒரு சின்ன ஆல்பத்தை அவனிடம் நீட்டினான் லாட்ஜ் பையன்.

"இதுல எத்தனை உருப்படிகள் இருக்கு?"

"இருபது சார்.."

"இதுங்களையெல்லாம் எங்கடா புடிக்கறீங்க..?"

"ஏன் சார்..?"

"சும்மா சொல்லுடா.."

"எனக்குத் தெரியாது சார்.. நான்போய் மாரிமுத்துகிட்ட சொல்லுவேன். அவர்தான் அனுப்பி வைப்பார்.."

"சரி.. போய்ட்டு அப்புறமா வா.."

பையன் போனதும் ஆல்பத்தைப் புரட்டினான். முதல் பக்கத்திலேயே உடை விஷயத்தில் கவர்ச்சி நடிகை ஷகீலாவோடு போட்டி போடுகிற மாதிரி ஒரு பெண் தெரிந்தாள். லேசாகச் சிரித்தாள். மார்புகள் தூக்கலாய் செயற்கைத்தனமாய் கண்களை உறுத்தின.

கதவு தட்டப்பட "யாரது?" என்றான். கதவைத் திறந்து கொண்டு ஒரு ஐம்பது வயதுக்காரர் வெற்றிலை பாக்குக் குதப்பலோடு சிரித்தபடி உள்ளே வந்தார்.

"வீடு கேட்டிருந்தேளே..! எங்க வேல பார்க்கறேள்..?"



"எதுவும் சொல்ல முடியாது.."

"எங்கிருந்து வரேள்னு கேட்டா சொல்ல மாட்டேங்கறேள். ஏன் வந்தேள்னு கேட்டா பதில் இல்லை. என்ன வேலை செய்யறேள்னாலும் பதில் இல்லை. எப்படித்தான் வீடு பார்க்கறது..?"

"எனக்கு வீடு வேணும்.. முடிஞ்சா பாருங்க.."

"கவலையே படாதீங்க. கையோடவே ஒரு வீட்டை முடிச்சிட்டுதான் வந்திருக்கேன். உங்களைப் பத்தித் தெரிஞ்சிக்கத்தான் விசாரிச்சுப் பார்த்தேன். இப்பவே போகலாமா?"

"அட்வான்ஸ் எவ்வளவு?"

"பத்தாயிரம்.."

பணத்தைக் கொடுத்துவிட்டுச் சொன்னான். "சாவி வாங்கி வெச்சிருங்க. நாளைக்குக் காலைல வாங்க. இன்னைக்கு நைட் ஒரு முக்கியமான வேலை இருக்குது... சரி கிளம்புங்க.."

அவர் கிளம்பிப் போனதும் லாட்ஜ் பையன் வந்தான். "என்ன சார்.. பார்த்து முடிச்சிட்டீங்களா..?"

"ச்.." கொட்டினான்.

"என்ன சார்.. எது வேணும்..?"

"ஊ..ஹூ..ம்.."

"இவ அமுதா சார்.. அம்சமா இருப்பா.."

"உதடு சரியில்லை.."

"இது சரோ.. சினிமாவுலகூட தலை காட்டியிருக்கு.."

"அப்படீன்னா சாக்கடை ஆகியிருப்பா.."

"இவ மாலா சார்.. சூப்பர் டிக்கெட்.."

"வேற ஆல்பம் இல்லையா..?"

"இது ஒண்ணுதான் சார் இருக்கு.."

"சரி. இவளைக் கூட்டிகிட்டு வா..." அவன் போட்டோவுல இருக்கற கடைசிப் பெண்ணை காட்டினான்.

லாட்ஜ் பையன் முகம் மாறியது.

"இவ சுதா சார்.. கரிக்கட்டை மாதிரி.."

"இவதான்னு நான் கிளியரா முடிவு பண்ணிட்டேன்.."

## 2



பளபள உடம்போடு இருந்த லான்சர் கார் அந்த சூப்பர் செம் அடித்த பங்களாவுக்குள் பிரவேசித்தது. போர்டிகோவில் நுழைந்து நின்றதும் எங்கிருந்தோ ஓடி வந்தான் முண்டாசு கட்டின வேலைக்காரன்.

காருக்குள் இருந்து இறங்கிய லட்சுமண்குமாருக்கு பவ்யமாய் கை கூப்பி "வாங்க டாக்டராய்யா..." என்றான்.

முப்பது வயது கொண்ட லட்சுமண் ஒரு கால்நடை மருத்துவர். கையில் இருந்த ப்ரீப்கேஸை வேலைக்காரன் வாங்கிக்



கொண்டு முன்னால் நடக்க பின்னால் நடந்தான்.

"ஏம்பா.. வேலு..?"

"அய்யா.."

"அம்மா இருக்காங்களா வீட்ல.."

"இருக்காங்கய்யா..."

"நான் எந்த அம்மாவைக் கேட்டேன்..?"

"வாசுகி அம்மாவைத்தானே கேட்கறீங்க..?"

"நான் கேட்டது பிரதீபாவை.."

"ஓ... சின்னம்மாவா..? அவங்க இன்னும் காலேஜ்லேருந்து வரலைங்க.."

"மணி அஞ்சரை ஆச்சே..?"

"காலையலயே சொல்லிட்டிருந்தது.. இன்னிக்கு காலேஜ்ல ஏதோ விழாவாம்ல.."

ஹாலை அவர்கள் கடந்து கொண்டிருந்த விநாடி மாடிப்படிகள் அருகே உதயமானாள் வாசுகி. பிரதீபாவின் அப்பாவுக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட்டு இரண்டாவது வருடத்திலேயே பூவையும் பொட்டையும் இழந்தவள். புடவைத் தலைப்பை இழுத்துக் கழுத்தில் போர்த்திக் கொண்டபடியே புன்னகைத்து -

"வாங்க டாக்டர்.." என்றாள்.

"காலைல நீங்க போன் பண்ணினப்ப நான் ஹாஸ்பிடல்ல இல்ல.. எனி ப்ராப்ளம்?"

"மறுபடியும் அந்த செவலை மாட்டுக்கு

உடம்பு சரியில்லை.. அது சரியா தீனி எடுத்துக்கறதில்லை. பால்கூட ரொம்பக் குறைச்சல்.."

"மிஸஸ் வாசுகி.. அதுக்குக் கறவை நிக்கற வயசுன்னு நினைக்கறேன்.."

"நோ.. டாக்டர். எவ்வளவு நாளா நான் பண்ணையை உன்னிப்பா பராமரிச்சுட்டு வர்றேன். அதோட வயசுக்கு இந்தக் கறவை நிச்சயம் கம்மிதான்."

"வாங்க பார்க்கலாம்.."

வரிசையாய் பத்துப் பதினைந்து மாடுகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. சாண நாற்றமும், ஈரமான வைக்கோல் மணமும் கதம்பமாய் மணத்தது.

"இந்தப் பக்கமா வாங்க டாக்டர்.."

"இங்க மொத்தம் எத்தனை மாடுகள் இருக்கு..?"

"பதினாலு. ஆறு மாடுகள்தான் கறவைக்கு வந்திருக்கு.."

"காளை எத்தனை இருக்கு..?"

"ரெண்டு.."

"நீங்க சொன்ன செவலை இதுதானா..?"

"ஆமா.."

வேலுவை அழைத்துக் கொண்டு அந்த மாட்டை நெருங்கினான் லட்சுமண்குமார். "வேலு மாட்டோட கழுத்துக் கயிற்றைப் பிடிச்சிக்கோ.. நான் செக்அப் பண்ணிடறேன்.."



சொன்னவன் சில நிமிஷம் செலவழித்து மாட்டைச் சோதித்துப் பார்த்துவிட்டு வாசுகியிடம் திரும்பினான்.

பாக்கெட்டில் இருந்த சின்ன சைஸ் பிரிஸ்கிரிப்ஷன் தாளை உருவி பால்பாயிண்ட் பேனாவால் எழுத்துக்களை அதில் நிரப்பினான்.

"இந்தாங்க. இந்த மருந்தை தினமும் ஒருவேளை மட்டும் தீவனத்தோட கலந்து கொடுங்க.."

"ஆகட்டும் டாக்டரய்யா..." என்ற வேலு அந்த மருந்துச் சீட்டை வாங்கிக் கொண்டான்.

"மிஸஸ் வாசுகி..?"

"என்ன டாக்டர்..?"

"பிரதீபா இன்னும் வரலை போலிருக்கு.."

"இப்ப வந்திடுவா.."

"அவளுக்கு எப்ப கல்யாணம்..? உங்க குடும்ப விஷயத்தைக் கேட்கறேன்னு தப்பா நினைச்சுடாதீங்க..?"

"நோ.. நோ.. அப்கோர்ஸ்.. நீங்க எங்க பேமிலி வெட்னரி டாக்டர்.."

"அவளோட காலேஜ் படிப்பு முடியறதுக்கு இன்னும் ஆறுமாதம் இருக்கு.. அதுவரைக்கும் அவளோட கல்யாணத்தைப் பத்தி நான் நினைச்சுக்கூடப் பார்க்கலை."

"மாப்பிள்ளையை சொந்தத்தில்தான் பார்க்கப் போறீங்களா.. இல்லே..?"

"இந்த விஷயத்தில் நான் கொஞ்சம் கண்டிப்பு டாக்டர். பிரதீபா என்னோட வயத்துல பொறக்கலைன்னாலும் அவ என்னோட பொண்ணுதான். அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுத் தர்றதை என்னோட கடமையாகவே நான் நினைக்கறேன்.."

"ஸோ..?"

"ஸோ.. சொந்தத்தில் யாராவது நல்ல பையனா பார்த்துதான் செய்யப் போறேன்.."

"ஒருவேளை.. பிரதீபா யாரையாவது லவ் பண்ணினா அவளோட விருப்பத்துக்கு விட்டுத் தருவீங்களா?"

"நீங்க அப்படி நினைக்கறீங்களா..?"

"நோ.. நோ.. காதலிச்சா உங்க முடிவு எப்படி இருக்கும்னு கேட்டேன்.."

"எனக்குத் தெரிஞ்சவரை பிரதீபா அப்படிப்பட்ட பொண்ணு இல்லை. எம்மேல உயிரையே வெச்சிருக்கா. என்னோட வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து நான் கை காட்ற மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டுவா.."

"உங்க நம்பிக்கை நிஜமாக வாழ்த்துகள். ஆனா இந்தக் காலத்துப் பொண்ணுங்களை நம்ப முடியாது மிஸஸ் வாசுகி."

"எங்க பிரதீபா அப்படி இல்லை.."

லட்சுமண்குமார் ஏதோ பேசுவதற்காக வாயைத் திறந்த விநாடி –

"சித்தீ.." என்று ஆர்ப்பாட்டமாய்க் குரல்



கொடுத்தபடி பிரதீபா உள்ளே வந்தாள். வெனிலா ஐஸ்க்ரீம் மாதிரி மினுமினுப்பாய் தெரிந்த பிரதீபா சல்வார் கமீஸில் இருந்தாள். இரட்டை ஜடை. மெலிதாய் அசையும் ஒரு செயின். மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கண்கள்.

"என்ன பிரதீபா.. காலேஜ் விழா என்னாச்சு..?" லட்சுமண் குமார் கேட்டான்.

"நடந்திட்டிருக்கு.. நான் வந்திட்டேன்.."

"ஏன்..?"

"காலேஜ் பசங்க ஒரே கலாட்டா.."

"காலேஜ் ஸ்டூடண்ட்ஸ்னா அப்படித்தான் இருப்பாங்க."

"இருந்தாலும் எங்க காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் ரொம்ப ரொம்ப மோசம். எதைப் பேசினாலும் டபுள் மீனிங்.." பேசிக் கொண்டே போனவள் பேச்சை சட்டென்று நிறுத்திவிட்டு வாசுகியையே பார்த்தாள்.

வாசுகி புன்னகைத்தாள். "என்ன பிரதீபா.. அப்படிப் பார்க்கறே..?"

"சொல்லட்டுமா..?"

"ம்.."

"டாக்டர். இந்தப் புடவையில சித்தி ரொம்ப அமர்க்களமா இருக்காங்க பாருங்க.." வெட்கத்தோடு புன்னகைத்தாள் வாசுகி.

"எப்பப்பாரு உனக்கு இதே பேச்சுதான். தலை மட்டும்தான் நரைக்கலை. பட். எனக்கும்

அரைக்கிழம் வயசாயிடுச்சு.."

"நீ என்னதான் சொல்லு சித்தி.. அழகுதான்.."

"பிரதீபா சொல்றதும் சரிதான்.." லட்சுமண்குமார்.

"பார்த்தியா சித்தி.. டாக்டரே சொல்லிட்டார்.."

"நான் கிளம்பட்டுமா..?" லட்சுமண்குமார் புறப்படத் தயாரானான்.

"ஒரு அஞ்சு நிமிஷம். காப்பி சாப்பிட்டுப் போகலாம்.." வாசுகி சொல்ல, பிரதீபாவும் குரல் கொடுத்தாள்.

"ஆமா.. டாக்டர். ஒரு அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணுங்க. நானும் உங்ககூடவே டியூஷன் சென்டர் வந்திடுவேன்.."

சித்தி கோபமாய்த் திரும்பினாள். "ஏய். பிரதீபா. டாக்டருக்குத் தொந்தரவு கொடுத்திட்டு.."

"நோ ப்ராப்ளம்.. போற வழிதானே.. நான் டிராப் பண்ணிடறேன்.."

சில நிமிஷங்களில் காப்பி குடித்துவிட்டு இருவரும் புறப்பட்டார்கள். கார் விர்ரெனக் கிளம்பியது. லட்சுமண்குமார் பிரதீபாவைப் பார்த்துக் கேட்டான்.

"இன்னிக்கு டியூஷனை எங்கே வெச்சுக்கலாம்..?"

விநாடி நேரம் யோசித்த பிரதீபா பிறகு சொன்னாள்.



"ம்.. ஹோட்டல் கற்பகாவில்.."

கார் போய்க் கொண்டிருந்தது.

## 3



இரண்டு பாக்கெட் சிகரெட்டுகள் உயிரிழந்தபோது கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தாள். படுத்திருந்தவன் எழுந்து உட்கார்ந்தான்.

வந்தவள் சுமார் ரகமாய் இருந்தாள். ரோஸ் பவுடரிலும், லிப்ஸ்டிக்கிலும் கொஞ்சம் தூக்கலாய்த் தெரிய முயற்சித்தாள். அவள் கட்டியிருந்த இளநீல வர்ண ஷிபான் சேலை உடம்பின் வளைவுகளை மறைக்க மறுத்தது.

உள்ளே வருகிறபோதே கதவைத் தாழிட்டு விட்டு வந்தாள். கையிலிருந்த சிகரெட்டை அணைத்துவிட்டு அவன் நிமிர்ந்தபோது உதட்டில் ஒரு ரெடிமேட் புன்னகையை ஒட்ட வைத்துக் கொண்டு கட்டிலில் வந்தமர்ந்தாள். அவனுடைய மணிக்கட்டைப் பிடித்து உயர்த்திப் பிடித்தாள். "ரொம்ப லேட் ஆயிடுச்சா..?" அவள் கேட்டதும் அவன் தோள்களைக் குலுக்கினான்.

"பரவாயில்லை.. இதென்ன ஆபீஸா..? சரியான நேரத்துக்கு வர்றதுக்கு..?"

அவள் சிரித்தாள். சென்ட் வாசம் குப்பென்று வீசியது.

"உம்பேர்தான் சுதாவா..?"

"சுதா, நளினா, ஜென்ஸி, ரெஜினா.. எல்லாமே நான்தான்."

"அந்த ஆல்பத்தில் உன் பேர் சுதான்னுதானே போட்டிருந்தது?"

"நாலு லாட்ஜுக்குப் போறேன். ஒவ்வொரு இடத்துக்கும் ஒரு பேர். இங்கே நான் சுதா.."

"உன்னோட உண்மையான பெயர்..?"

"என்னோட சொந்தப் பேர்ல இந்தத் தொழிலைச் செய்யக் கஷ்டமாயிருந்தது. ஸோ.. அந்தப் பெயரையே நான் மறந்துட்டேன்."

"நான் பார்த்தவரைக்கும் எல்லோருமே இப்படித்தான் சொல்றாங்க..."

அவள் சிரித்தாள். "இந்தத் தொழில்ல ஈடுபடற பொண்ணுங்களோட கதையும் ஏறக்குறைய ஒண்ணு போலத்தான் இருக்கும். அதை விடுங்க.. நீங்க பேசறதைப் பார்த்தா இந்த லைன்ல உங்களுக்கு நிறைய அனுபவம் இருக்கும் போலிருக்கே..?"

கேட்டுக் கொண்டே அவன் சட்டை பட்டன்களில் கை வைத்தாள். அவன் பட்டென்று அவளுடைய கையைத் தட்டி விட்டான்.

"கொஞ்சம் பொறு.. நான் உன்கூடக் கொஞ்சம் பேசணும்.."

"ரூமுக்குள்ளே நுழைஞ்சதுமே மேல பாயற ஆளுங்களைத்தான் நான் பார்த்திருக்கேன். நீங்க கொஞ்சம் வித்தியாசமா இருக்கீங்க.



என்கிட்டப் பேசறதுக்கு என்ன இருக்கு..?"

கேட்டுக்கொண்டே அவன் மார்பில் சாய்ந்தாள். சரிந்த அவளை நிமிர்த்தி உட்கார வைத்துவிட்டுத் தொடர்ந்தான் அவன்.

"மாரிமுத்து யாரு..?"

"எதுக்கு கேட்கறீங்க..?"

"பதில் மட்டும் சொல்லு.."

"நீங்க ஆல்பத்துல பார்த்தீங்களே.. அத்தனை பொண்ணுங்களுக்கும் அவன்தான் புரோக்கர்.. மொத்தம் இருபது பேர்.."

"மாரிமுத்து எப்பேர்ப்பட்டவன்..?"

"அந்த மாரிமுத்து மோசமான ஆள். தினசரி ரயில்வே ஸ்டேஷனுக்குப் போயி ஊரைவிட்டு ஓடி வர்ற பொண்ணுங்களை மோப்பம் பிடிச்சு தள்ளிட்டு வந்திடுவான். எப்படியோ பேசி மனச மாத்திடுவான். இல்லைன்னா பொணமாக்கிடுவான். ஒட்ற வரைக்கும் ஓட்டிட்டு மும்பைக்கு வித்திடுவான்.."

"மாரிமுத்துவோட வீடு எங்கேயிருக்கு..?"

"எதுக்கு அவனைப் பத்தியே கேட்கறீங்க.. என்ன வேணும் உங்களுக்கு..?"

தலையணைக்கடியிலிருந்து ஒரு பெண் போட்டோவை எடுத்துக் காட்டிக் கேட்டான்.

"இவளை உனக்குத் தெரியுமா..?"

"தெரியாது.. எதுக்காகக் கேட்கறே..?"

"இவளும் உன்னை மாதிரி தொழில்காரி தான்."

"தெரியலை.. நான் பார்த்ததில்லை..."

"சரி.. நீ போகலாம்.."

"என்னய்யா.. என்னைத் தொடத்தானே ரேட் பேசிக் கூட்டியாந்திருக்கே..? திடீர்னு போகச் சொல்றே...? நீ பைத்தியமா..?"

"ஏய்.. நீ கிளம்பு.. உன்னைத் தொடற மூட் எனக்கில்லை.. டேபிள்மேல இருக்கற பணத்தை எடுத்துட்டுக் கிளம்பு..."

டேபிள்மேல் இரண்டு ஆயிரம் ரூபாய் நோட்டுகள் படபடத்தன. எடுத்து ஜாக்கெட்டுக்குள் திணித்தவள் லேசாகத் திறந்திருந்த மேஜை டிராயருக்குள்ளே பார்த்து அதிர்ந்தாள். உள்ளே ஒரு கனமான பிஸ்டல் தூங்கிக் கொண்டிருந்தது.

## 4



ஓட்டல் கற்பகாவில் டிபனை முடித்துக் கொண்டு ஏ.ஸி. அறையினின்றும் வெளிப் பட்டார்கள் லட்சுமண்குமாரும், பிரதீபாவும். கார் பார்க்கிங்கில் நிறுத்தியிருந்த காரை நோக்கிப் போனார்கள்.

"அடுத்தபடியா எங்கே போறோம்..?" பிரதீபா கேட்டாள்.

"ஏதாவது பீச்சுக்குப் போகலாமா?"

"ஐயோ வேண்டாம்.. சித்திக்கு சந்தேகம் வந்திடும்.. எட்டு மணிக்கெல்லாம் நான் வீட்ல இருக்கணும்.."



"உனக்கு சரியான சித்தி பயம்.."

"எனக்கொண்ணும் சித்திகிட்டே பயம் கிடையாது.."

"சரி.. எங்கே போகலாம் சொல்லு..?"

"ஸ்டேடியம் கிரவுண்டுக்குப் போயிடலாம்.. இப்போ போனா காலியா இருக்கும். ஒரு ஏழே முக்கால் வரைக்கும் ஜாலியாப் பேசிட்டுக் கிளம்பிடலாம்.."

பேசிக் கொண்டே இருவரும் காருக்குள் நுழைய.. கார் வேகமெடுத்தது.

"பிரதீபா.."

"ம்.."

"கொஞ்சம் பக்கத்துல ஒட்டி உட்காரேன்.."

"இந்த சில்மிஷமெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்தான்.."

"இது சில்மிஷம் இல்லை. என்னோட ஆசை.."

"ஒழுங்கா ரோட்டைப் பார்த்து ஓட்டுங்க.."

"ஆமா.. நம்மளச் சித்தி பார்த்துட்டா என்னாகும்..?"

"எனக்கு செமையா டோஸ் விழும்.. பிறகு நான் அழுதேன்னா சித்திக்கு தாங்காது.. உடனே தலையை ஆட்டி சரின்னுடுவாங்க.."

"அதுதான் நடக்காது.."

"எப்படி..?"

"உன்னோட சித்திகிட்ட இன்னிக்குப்

பேசினேன். சொந்தத்துலயே மாப்பிள்ளை பார்க்கப் போறாங்களாம். நீ காதல்ல சிக்கவே மாட்டியாம். சித்தி கை காட்ற மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டுவியாம்.."

"அய்யய்யோ..."

கார் மெதுவாக கேட்டருகே நிற்க சுண்டல் பையன் பொட்டலத்தோடு காரை வழிமறித்தான்.

பத்து ரூபாயை நீட்டி சுண்டலை வாங்கிப் பிரதீபாவிடம் நீட்டினான் லட்சுமண்குமார்.

"இப்ப எதுக்காக சுண்டல் வாங்கினீங்க..?"

"இல்லேன்னா இந்த இடத்த விட்டு அவன் போக மாட்டானே.."

"அதே பாலிஸியைத்தான் நானும் என்னோட சித்திகிட்டக் காட்டப் போறேன். எவ்வளவு தூரம் கெஞ்ச முடியுமோ அப்படிக் கெஞ்சி கல்யாணத்தை முடிக்கப் போறேன்.. பட்டினி கிடந்தாவது சாதிப்பேன்.."

"நீ சாப்பிடாம அடம் பிடிச்சாலும் உன் சித்தி மசிய மாட்டாங்க.."

"மசிய வைக்கறேன்.." பிரதீபா சேலஞ்ச் செய்து கட்டை விரலை உயர்த்திக் காட்டினாள்.

"சரி. உன் சித்தி மசியலைன்னா.. என்ன பண்ணலாம். ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிட்டு மருதமலை முருகன் கோயில்ல மாலை மாத்திக்கலாமா..?"

"சரி லட்சுமண்.. எனக்கு திருட்டுத்தனம்



பிடிக்காது. என் சித்தியோட பிரச்னையை நான் பார்த்துக்கறேன்.."

"பிரதீபா.."

"ம்.."

"உங்களோட ஒப்பிடும்போது நான் ஒரு குப்பை மேடு.. உன்னோட சித்தி போர்ஸ் பண்ணினா என்னை மறந்துட மாட்டியே..?"

அவள் முறைத்தாள். "இதோ பாருங்க.. அப்படி ஒரு சூழ்நிலை வந்தா நான் என்னோட உயிரை விட்டுடுவேன்.. போதுமா..?"

"ஏய்.. வாட் நான்சென்ஸ் யூ டாக்கிங்.."

பிரதீபா சிரித்தாள். "ஒரு பேச்சுக்கு சொன்னேன். கோழைங்க காதலிக்கக் கூடாது. காதலிக்கறவங்க கோழையா இருக்கக் கூடாது.. இதுதான் என்னோட கொள்கை.."

"சரிதான்.."

"அப்ப என்னோட சித்திகிட்டே நம்ம காதலை இப்பவே டிக்ளேர் பண்ணிடலாமா?"

"வேண்டாம்.."

"ஏன்..?"

"உன்னோட படிப்பு முடியட்டும்.."

"அதுக்கு முன்னாடியே தெரிஞ்சிட்டா..?"

"தெரியற மாதிரி நடந்துக்கக் கூடாது.."

சரியாய் எட்டு மணிக்கு வீட்டுக்குள் நுழைந்தாள் பிரதீபா. ஹால் சோபாவில் உட்கார்ந்து கம்பராமாயணத்தைப் படித்துக்

கொண்டிருந்த சித்தி வாசுகி நிமிர்ந்தாள். புன்னகையோடு "என்ன பிரதீபா இவ்வளவு நேரம்..?"

"சாரி சித்தி.. கொஞ்சம் லேட்டாயிடுச்சு.."

"பிரதீபா.. உன்னோட கொஞ்சம் பேசணும்..?"

"எ.. என்ன பே..சணும்..?"

"இப்ப நீ எங்க போயிட்டு வர்றே..?"

"ட்..ட்யூஷனுக்கு.."

"என்னோட முகத்தைப் பார்த்துச் சொல்லு.."

"சி....த்.....தி.."

"நீ நிஜமா ட்யூஷனுக்குத்தான் போயிட்டு வர்றியா..?" வாசுகி அவளை ஆழமாய் ஊடுருவிக் கொண்டு கேட்க, பிரதீபாவுக்கு முதுகில் வியர்வை கால்வாய்கள் ஓடின. நாக்கு காகிதமாய் உலர்ந்தது.

"சி...த்...தி.." தட்டுத் தடுமாறிக் கொண்டு பேச முயன்றவளை கையமர்த்தினாள் வாசுகி.

"எத்தனை நாளா.. இது நடந்துட்டு வருது..?"

## 5



அவன் ஒரு சிகரெட்டை சாம்பலாக்கிக் கொண்டே நடந்தான். சாயந்திர ஆறுமணி. மேற்கில் சூரியன் ரத்தமாய் கக்கி செத்துக்



கொண்டிருந்தான். குடிசைகள் நிரம்பிய சேரிப் பகுதிக்குள் நுழைந்த அவன் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு அந்தப் பெட்டிக்கடையை நெருங்கினான். சிகரெட் அட்டையை சின்னச் சின்ன துண்டாய் வெட்டிப் போட்டுக் கொண்டிருந்தவன் நிமிர்ந்தான்.

"என்ன சார் வேணும்..?"

"இந்தத் தெருவுல மாரிமுத்து வீடு எது?"

"எந்த மாரிமுத்து.. பலான ஆளா..?"

"ஆமா.."

"அதோ அந்த ஓட்டு வீடுதான்.." கடைக்காரன் காட்ட, அவன் அந்த வீட்டை நோக்கி நடந்தான். அருகே வந்து நின்றான். கையிலிருந்த இரண்டு செண்டிமீட்டர் சிகரெட்டை சாக்கடையில் சுண்டிவிட்டு உள்ளே நுழைந்தான்.

உள்ளே லுங்கி கட்டின பேர்வழி காற்று மண்டலத்துக்கு பீடிப்புகையை விட்டுக் கொண்டிருந்தான்.

"இங்கே மாரிமுத்துங்கறது..?"

"நான்தான்.. நீ யாரு..? போலீஸ் ஆளா..?"

"நான் போலீசுக்கு வேண்டப்படாத ஆள்.."

"அப்படின்னா...?"

"நான் ஒரு பலான பத்திரிகை நடத்திட்டு வர்றேன்.. அதுல பலான படங்கள், நியூஸ்கள்தான் அதிகம்.."

"அதுசரி. என்கிட்டேயிருந்து உனக்கு என்ன

வேணும்..?"

"நீ நடத்தற தொழில் சம்பந்தமா.. எது சொன்னாலும் அது விபரம்தான்.. போட்டோஸ் இருந்தாலும் கொடு.. வேண்டிய பணம் தர்றேன்.."

"சரி இப்படி உட்காரு.. இப்ப வந்திடறேன்.." சொன்னவன் எழுந்து உள்ளே போனான். தட்டி வைத்து தடுத்த நான்கைந்து அறைகளைத் தாண்டியதும் ஒரு அறைக்குள் எட்டிப் பார்த்துக் குரல் கொடுத்தான்.

"சரோஜா.."

"என்னண்ணே..?" மார்பு கச்சைகளில் பிதுங்கும் மார்புகளோடு ஒரு பெண் எட்டிப் பார்த்தாள்.

"கொஞ்சம் வெளியில வா.." அவள் வந்தாள்.

"பக்கத்து ஜன்னலுக்குப் போய் சத்தம் போடாம எட்டிப் பாரு.."

"யாரு வந்திருக்கா.. பார்ட்டியா..?"

"நீ போய் மொதல்ல பார்த்துட்டு வா.. சொல்றேன்.."

பார்த்துவிட்டுச் சொன்னாள். "யார்னு தெரியலையே..?"

"சுதா வந்து சொன்னாள்ல.. அவனமாதிரி தான் தெரியுது.."

"துப்பாக்கியெல்லாம் வெச்சிருந்ததாச் சொன்னாளே.. ஏதாவது ஸ்பெஷல் போலீசா இருக்கப் போறாண்ணே.."



"ஏதோ பத்திரிகைக்காரனாம்.. சொல்றான்.. சரி.. நீ ஒண்ணு பண்ணு.. நேரா ஸ்டேஷனுக்குப் போயி இப்படி ஒருத்தன் வந்திருக்கான்னு இன்ஸ்பெக்டர்கிட்டச் சொல்லி அவரைக் கூட்டிட்டு வா.. அவரு வந்து ரெண்டு தட்டு தட்டினா உண்மையைக் கக்கிட்டுப் போறான்.."

சரோஜா பின்பக்கம் நழுவியதும் மாரிமுத்து முன் அறைக்கு வந்தான். அவன் மோவாயில் கை வைத்து எதிர்ப்புற சுவரில் மாட்டியிருந்த காலண்டர் பெண்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஒரு சிகரெட் கொடேன்.. உன்னோட பிராண்ட் ரொம்ப உசத்தியாத் தெரியுது.." வாங்கிப் பற்ற வைத்துப் புகைத்துக் கொண்டே கேட்டான்.

"உனக்கு என்ன தகவல் வேணும்..?"

"இந்தப் போட்டோவைப் பாரு.." என்று எடுத்துக் காட்டினான். மாரிமுத்து புகைவழிகிற வாயோடு பார்த்தான். உதட்டைக் குவித்து விசிலடித்தான்.

"குட்டி அமர்க்களமா இருக்காளே யாரு..?"

"எனக்கு வேண்டிய பொண்ணு..."

"இவளப் பார்த்தா நல்ல குடும்பத்துப் பொண்ணு மாதிரி இருக்காளே.. பார்த்தாலே கண்ல ஒத்திக்கற மாதிரி இருக்கு. என்கிட்ட வந்து விசாரிக்கறே..?"

"இது குடும்ப விளக்கில்லை. தெரு விளக்கு.."

"இவ தொழில்காரின்னா எப்படி..?"

"இவனை உனக்குத் தெரியுமா..? தெரியாதா..? அதை மட்டும் சொல்லு.." அவன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே வீட்டு வாசலில் மழை பெய்கிற தினுசில் ஒரு வாகனம் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

## 6



**வா**சுகி இறுக்கமான முகத்தோடு சோபாவுக்கு உடம்பைக் கொடுத்திருந்தாள். பிரதீபாவுக்குப் பக்கத்தில் லட்சுமண்குமார் உட்கார்ந்து வாசுகியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"டாக்டர்.. இது உங்களுக்குத் தப்புன்னு படலையா?"

"ஸாரி மிஸஸ் வாசுகி.. நானும் பிரதீபாவும் உங்களுக்குத் தலைகுனிவு ஏற்படற மாதிரி தப்பா எதுவும் நடந்துக்கலை. சந்தர்ப்பம் வரும்போது உங்ககிட்டே சொல்லிக்கலாம்னு இருந்தேன்."

"நீங்க என்னதான் சமாதானம் சொன்னாலும் நான் ஒப்புக்க மாட்டேன்.."

"மிஸஸ் வாசுகி.. உங்களோட கோபம் நியாயமானது. அதே சமயத்துல என்னோட உணர்வுகளையும் கொஞ்சம் எண்ணிப் பாருங்க.."

"ஒரு அப்பாவிப் பொண்ணு மனசைக்



கெடுத்து அவனோட படிப்பையும் பாழ் பண்ணியிருக்கீங்க.. நான் இங்கே உங்களைக் கூப்பிட்டது உங்க காதலை ஆசீர்வதிக்க இல்லை. வெட்டிப் போடத்தான்.."

"வாசுகி.."

"பிரதீபாவுக்கு விருத்தாசலத்தில் இருக்கற அவளுடைய மாமா பையனுக்கு கல்யாண ஏற்பாடுகளை உடனே செய்யறேன். இனிமே நீங்க பிரதீபாவோட வாழ்க்கையில குறுக்கிட வேண்டாம்.."

வாசுகி படபடவென்று பொரிய.. பிரதீபா அதிர்ச்சியோடு நிமிர்ந்தாள். "சித்தி.."

"பிரதீபா இப்போ உனக்கு எம்மேல கோபம் வரும். ஆனா உன்னோட வாழ்க்கை பாழாய்ப் போக நான் அனுமதிக்க மாட்டேன்.. டாக்டரை இந்த நிமிஷத்தோட மறந்திடு.."

"ஏன் அவருக்கு என்ன குறைச்சல்.. என்னை சந்தோஷமா வெச்சுக்க மாட்டாரா என்ன..?"

வாசுகி கோபமாய் நிமிர்ந்தாள்.

"பிரதீபா. உன்னோட கல்யாணத்தை முடிவு செய்ய வேண்டியது என்னோட பொறுப்பு. நீ இதுல அநாவசியமா தலையிடாதே.. உன்னை சொந்தத்துல கட்டித்தர்றதா உங்கப்பாவுக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கேன்.."

"உங்க சத்தியத்துக்காக என்னோட காதலைப் பலி கொடுக்க முடியாது.."

"பிரதீபா உள்ளே போ.."

"நான் போக மாட்டேன்.. பிரச்னை என்னோடது. இதுக்கு ஒரு முடிவு தெரியாம நான் நகர மாட்டேன். இந்தக் காதலுக்கு நீங்க சம்மதிச்சே ஆகணும்..."

"இல்லைன்னா...?"

"ஓடிப்போய் நாங்களே கல்யாணம் பண்ணிக்குவோம்னு நினைச்சுக்காதீங்க. இந்தத் தோட்டத்துல இருக்கற கெணத்துல குதிச்சு செத்திடுவேன்.."

வாசுகி பிரமித்து அயர்ந்து போனாள்.

* * * * *

**வா**சலில் ஏதோ ஒரு வாகனம் வந்து நிற்கும் சத்தம் கேட்டு மாரிமுத்து எட்டிப் பார்த்தான். வெளியே போலீஸ் ஜீப் வேகமாய் வந்து நின்றது. இன்ஸ்பெக்டரும், சரோஜாவும் இறங்கினார்கள்.

"வா..வாங்க சார்.."

"எங்கே அந்த ஆள்..?"

"உள்ளாற இருக்கான் சார்.."

மூவரும் வேகமாக உள்ளே நுழைந்தார்கள். அவன் உட்கார்ந்திருந்த இடம் காலியாக இருந்தது. இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"எங்கேய்யா அந்த ஆளு..?"

"இங்கேதான் சார் உட்கார்ந்திருந்தான்.."

"காணோமே.."

"சார்.. நான் வெளியே வந்து உங்ககிட்டப் பேசிட்டு இருக்கும்போது ஏதோ சந்தேகம்



வந்து பின்பக்க வழியா எஸ்கேப் ஆகிட்டான் போலிருக்கு..."

"வந்தவன் எப்படியிருந்தான்..?"

"சின்ன வயசு சார்.. காலேஜ்ல படிக்கற ஸ்டூடண்ட் மாதிரி இருந்தான். ஏதோ பத்திரிகை நடத்தறதா கப்ஸா விட்டான் சார்.."

"துப்பாக்கி வெச்சிருந்தானாமே.."

"ஆமா சார்.. சுதா பார்த்திருக்கா.."

"அவன் எந்த லாட்ஜ்ல தங்கியிருக்கான்னு தெரியுமா?"

"தெரியும் சார்.."

இன்ஸ்பெக்டருடன் ஜீப்பில் ஏற கிளம்பியது.. மாரிமுத்து வழி சொல்ல ஜீப் வேகம் எடுத்தது.

## 7



**லா**ட்ஜுக்கு முன்னால் வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே போனார்கள். மேனேஜர் பவ்யமாய் எழுந்து சல்யூட் அடித்தார்.

"என்ன சார்..?"

மாரிமுத்து அடையாளம் சொல்லி விபரம் கேட்க, மேனேஜர் சொன்னார்.

"அவன் காலி பண்ணிட்டுப் போய்ட்டான் சார்.."

அயர்ந்துபோன இன்ஸ்பெக்டர் மேஜையின் மேலிருந்த லாட்ஜ் ரெஜிஸ்தரை எடுத்தார்.

சந்துருவின் முகவரியைப் பார்த்துக் கேட்டார்.

"அவன் ஆள் எப்படிய்யா..?"

"சார்.. எனக்கொண்ணும் தெரியாது.. ரூம் பையனைக் கேளுங்க.. டேய்.. மணி..."

அடுத்த நிமிஷம் முடிவதற்குள் பிஞ்சில் பழுத்த அந்த சிறுவன் கம் இளைஞன் ஓடி வந்தான். இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் மிரண்டான்.

"சார்.."

"அந்த சந்துருவுக்கு 'நீதான் ரூம் சர்வீஸ் பண்ணினியா?"

"ஆமா சார்."

"அவன் குடிப்பானா?"

"பீர் மட்டும்.."

"பொம்பள சகவாசம்'எப்படி..?"

"ரொம்ப மோசம் சார்.. தினமும் கேட்பான்.."

"இந்த லாட்ஜ்லயிருந்து யாருக்காவது போன் பண்ணினானா..?"

மானேஜர் சொன்னார். "ஆமா சார். மூனு நாளைக்கு முன்னாடி மத்தியானம் மூனு மணிக்கு போன் பண்ணினான். டயல் பண்ணின நெம்பரை நோட்ல குறிச்சு வைக்கச் சொன்னேன்." என்றவாறே ஒரு 40 பக்க நோட்டை எடுத்துக் கொடுக்க இன்ஸ்பெக்டர்



வாங்கிப் புரட்டினார். மாலை மூன்று மணிக்கு நேரே இருந்த நெம்பரை உற்று நோக்கினார்.

28444526

"இந்த நம்பர் யாருக்குச் சொந்தமானதுன்னு தெரியலையே..?"

"வேணும்னா இதே நெம்பருக்குப் போன் பண்ணிப் பாருங்க சார்.."

இன்ஸ்பெக்டர் உடனே போன் செய்தார். ரிங் போய் எடுக்கப்பட்டது.

"ஹலோ.."

"இது 28444526தானே..?"

"சாரி. ராங் நெம்பர்.." என்று ரிசீவர் டக்கென்று வைக்கப்பட்டது. மறுபடியும் டயல் செய்தார். ரிங் போய் எடுக்க.. "டூ.. எய்ட்.. ட்ரிபிள் போர்.. பைவ்.. டூ.. சிக்ஸ்.." ஒவ்வொரு எண்ணையும் அழுத்தமாய் உச்சரித்துக் கேட்க, மறுபடியும் அதே குரல் "சாரி ராங் நெம்பர்.." என்று ரிசீவரை வைத்தது.

லாட்ஜ் மேனேஜர் சொன்னார். "வேணும்னா எக்சேஞ்ச் மூலமா ட்ரை பண்ணிப் பாருங்களேன்.."

இன்ஸ்பெக்டர் எக்சேஞ்சுக்கு போன் செய்தார்.

"ஹலோ எக்சேஞ்ச்.. நான் ஜெயராமன். இன்ஸ்பெக்டர். இந்த நெம்பருக்கு கனெக்ஷன் கொடுக்க முடியுமா? நெம்பர் 28444526."

சற்று நேரத்துக்குப் பின் "சார்.. லைன்

என்கேஜுடாவே இருக்கு.. பார்ட்டி அட்ரஸ் தரட்டுமா..?"

"ம்.."

"ஜே.கிருஷ்ணா, 527, இரண்டாவது குறுக்குத்தெரு, லாவண்யா நகர் விரிவுப்பகுதி.."

"தேங்ஸ்.." இன்ஸ்பெக்டர் காகிதத்தில் குறித்துக் கொண்ட அட்ரஸோடு நிமிர்ந்தார். ரிசீவரைச் சாத்திவிட்டு ஜீப்பை நோக்கி நடந்தவர் திரும்பினார்.

"மேனேஜர்.. நான் சொல்ற வரைக்கும் அவன் தங்கியிருந்த ரூமை யாருக்கும் தராதீங்க.. பூட்டியே இருக்கட்டும்.."

"சரிங்க சார்.." என்றவாறே அந்த அறையின் சாவியை எடுத்து இன்ஸ்பெக்டரிடம் நீட்ட, அவர் வாங்கி தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு ஜீப்பில் ஏறினார்.

அரை மணி நேரப் பயணத்துக்குப் பின் லாவண்யா நகர் வந்தது. இரண்டாவது குறுக்குத் தெருவுக்குள் நுழைந்து போய் எண் 527 எண்ணிட்ட அந்த மினி பங்களாவின் முன்னால் ஜீப்பை நிறுத்தினார். இறங்கி காம்பவுண்ட் கேட்டைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனார்.

## 8



**த**ன் அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு கட்டிலில் படுத்திருந்த லட்சுமண்



குமார் எழுந்து போய்க் கதவைத் திறந்தான். நெற்றியில் அகலமாய் ஆச்சர்யப் பட்டான்.

வெளியே வாசுகி நின்றிருந்தாள். அவளுக்குப் பின்னால் குடும்ப வக்கீல்.

"வா..வாங்க.."

"உங்ககூடக் கொஞ்சம் பேசணும்.."

"உள்ளே வாங்க.." என்று நாற்காலிகளைக் காட்ட அவர்கள் உட்கார்ந்தார்கள். வக்கீல் ஆரம்பித்தார்.

"மிஸ்டர் லட்சுமண்குமார். நான் வாசுகியோட குடும்பத்துக்கு 20 வருஷமா வக்கீலாக இருக்கேன். நான் வெறும் வக்கீல் மட்டுமல்ல. குடும்ப நண்பர். இப்ப விஷயத்துக்கு வர்றேன்.. நீங்களும் பிரதீபாவும் லவ் பண்றதா கேள்விப்பட்டேன்.. உங்களைப் பத்தி..?"

"அப்பா, அம்மா, உறவு ஜனம் இல்லை.. என்னை வெட்னரி டாக்டருக்குப் படிக்க வெச்ச மாமா இருந்தார். போன வருஷம்தான் அவரும் காலமானார்."

"அப்போ.. இந்த நிமிஷம் நீங்க ஒண்டிக்கட்டை.."

வாசுகி பேச்சில் குறுக்கிட்டாள். "டாக்டர். எங்க பண்ணையில இருக்கற மாடுகளுக்கு வைத்தியம் பார்க்க வந்தீங்க சரி.. பிரதீபா மனசைக் கெடுத்தது சரியா..?"

"நோ நோ.. நான் காதலிச்சேன்.."

"அந்தக் காதலுக்கு ஒரு விலையைப்

பேசிக்கலாமா?"

"விலையா..?" லட்சமண்குமார் அவர்களை குழப்பமாய்ப் பார்த்தான்.

"ஆமா.. விலைதான். இந்தக் கலியுகத்துல எல்லாமே விலைதான்.. உங்க காதலுக்கும் ஒரு விலையுண்டு.." என்று ஒரு ப்ரீப்கேஸை நீட்டினாள்.

வக்கீல் சொன்னார்.

"மொத்தம் இதுல பத்து இலட்சம் இருக்கு.. இத்தோட உங்க காதலுக்கு ஒரு முற்றுப் புள்ளியை வெச்சுக்கலாம்.."

"விலை கட்டுபடியாகாதே..."

"எவ்வளவு வேணும்..?"

"அஞ்சு கோடி.."

"என்ன விளையாடறீங்களா..?"

"நான் விளையாடலை.. விளையாடறது நீங்கதான். நான் பணத்துக்காக பிரதீபாவைக் காதலிக்கலை. இது என்னோட உண்மையான காதல்.."

"முடிவா நீங்க என்ன சொல்றீங்க?"

"பணத்தை எடுத்துகிட்டு வெளிய போங்கன்னு சொல்றேன். உங்களைப் பார்த்து நான் வெட்கப்படறேன்.. ப்ளீஸ் கெட் லாஸ்ட் ப்ரம் ஹியர்.."

"நல்லா யோசிங்க லட்சமண். பணம் போதலைன்னா இன்னும் கொஞ்சம் சேர்த்துத் தர்றேன்.."



"எனக்குக் கோபம் வர்றதுக்குள்ள எழுந்திரிச்சு வெளியே போயிடுங்க.."

வாசுகியும், குடும்ப வக்கீலும் புன்னகையோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். வக்கீல் கேட்டார்.

"என்னம்மா வாசுகி.. இனிமே நாம பேச வந்ததைப் பேசலாமா?"

"ம்.. பேசிடுங்க.."

"நாங்க வெச்ச டெஸ்ட்ல நீங்க ஜெயிச்சிட்டீங்க லட்சமண்குமார்.."

"டெஸ்ட்டா..?" திடுக்கிட்டான்.

"எஸ். பிரதீபாவை நீங்க உண்மையிலேயே காதலிக்கறீங்களா.. இல்லை. அவளோட சொத்துக்காகக் காதலிக்கறீங்களான்னு வாசுகிக்கு சந்தேகம். அதான் பணத்தைக் கொண்டு வந்து பேரம் பேசினோம்.. ஆனா நீங்க கடைசி வரைக்கும் உறுதியாகவே நின்னுட்டீங்க.."

லட்சமண்குமார் இன்னமும் திகைப்பாகவே இருக்க.. வாசுகி பேச்சைத் தொடர்ந்தாள்.

"ரொம்ப சந்தோஷம் லட்சமண்குமார்.. பிரதீபாவோட மனசை மதிச்சதுக்கு.."

"நா.. நா.. நான் இதை எதிர்பார்க்கலை.. பிரதீபாவை நான் கல்யாணம் பண்ணிக்கறதுல உங்களுக்குச் சந்தோஷம்தானே..?"

"ரொம்ப சந்தோஷம்.. உங்க கல்யாணத்தை உடனே முடிச்சிடலாம்.."

"இந்த நிமிஷமே நான் பிரதீபாவை

கல்யாணம் பண்ணிக்கத் தயார்.."

"என்னோட கணவர் உயிரோட இருந்தப்ப பிரதீபாவோட கல்யாணத்தை எப்படி நடத்தணும்னு சொன்னாரோ அப்படியே தடபுடலா நடத்திடலாம்.. ஆனா என்னோட நிபந்தனை ஒண்ணு இருக்கு.."

"என்ன..?"

"அவளை என்னோட மக மாதிரியே வளர்த்துட்டேன்.. கல்யாணத்துக்குப் பிறகும் அவ என்னோடதான் இருப்பா. அதனால நீங்களும் எங்களோடவேதான் இருக்கணும்.."

"அ..அது என்னால முடியாதே..."

"தப்பா நினைச்சுக்காதீங்க.. அவளை விட்டுட்டு நான் மட்டும் எப்படி அவ்வளவு பெரிய வீட்ல இருப்பேன்.. அதனால ஒரு குழந்தை பொறக்கற வரைக்குமாவது நீங்க என்னோட இருக்கணும்.."

வக்கீல் சொன்னார். "இதோ பாருங்க லட்சுமண்குமார். வீட்டோட மாப்பிள்ளையா இருக்கறது கௌரவக் குறைச்சல்னு நினைச்சுடாதீங்க.. உங்களுக்குத்தான் ஒரு சொந்த பந்தமும் இல்லையே.. அப்படியே உங்க டாக்டர் தொழிலையும் பார்த்துக்கலாம்.. ப்ளீஸ்.."

லட்சுமண்குமார் சில விநாடிகள் யோசித்து விட்டு மெல்லத் தலையாட்டினான். "சரி. உங்க இஷ்டம்.."

"தாங்க் யூ.."



"நாங்க கல்யாண ஏற்பாடுகளைப் பார்க்கலாமா?"

"தாராளமா.."

வாசுகியும் வக்கீலும் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு வாசலில் நின்றிருந்த காரில் ஏறிப் புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் போனதும் கதவைச் சாத்தித் தாழிட்டு விட்டு - ஒரு சந்தோஷத்துடன் கட்டிலில் புரண்டான்.

"டொக்.. டொக்.."

சந்தோஷத்தில் கண்மூடிப் படுத்திருந்தவன் மறுபடியும் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு எழுந்து போய்க் கதவைத் திறந்து அதிர்ந்து போனான்.

## 9



பங்களா அமைதியாக இருந்தது. இன்ஸ்பெக்டர் ஜெயராமன் மெதுவாய் நடந்து போய் போர்டிகோ படிகள் ஏறி காலிங் பெல் ஸ்விட்ச்சை அழுத்த அது வீறிட்டது.

ஒரு நிமிஷ நேர அவகாசத்திற்குப் பின் கதவு மெதுவாய்.. தயங்கித் தயங்கித் திறந்தது. பின்னால் ஒரு இளைஞன் புகையும் சிகரெட்டோடு லுங்கி கட்டியிருந்தான். "எ..எஸ்.." என்று தடுமாறினான்.

"இந்த வீட்ல கிருஷ்ணா யாரு..?"

"அப்படி யாரும் இல்லையே.."

"இந்த வீட்டு போன் நம்பர் என்ன..?"

"வ..வந்..வந்து..." திகைத்த அவனைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனார்.

"சொல்லு.. இந்த வீட்ல கிருஷ்ணா யாரு..?"

"நான்... நா.. இல்ல.."

"பின்னே யாரு..?"

இன்ஸ்பெக்டர் அவனிடம் கேட்டுக் கொண்டிருக்கும்போதே மாடியில் ஏதோ சத்தம் கேட்டது.

"மாடியில யாரு..?"

"சார்.. வந்... து.."

"என்னடா எதைக் கேட்டாலும் முழிச்சு முழிச்சுப் பார்த்துட்டிருக்கே..?" இன்ஸ்பெக்டர் அவனை லத்தியால் தள்ளிவிட்டு மாடிக்குப் போனார். சத்தம் வந்த அறையைத் தள்ளினார். உள்ளே தாழிடப்பட்டிருந்தது.

"உள்ளே யாரு..?"

"சார்.. உள்ளே எங்களோட கெஸ்ட் தூங்கிட்டிருக்காங்க.."

"டேய்.. இந்த வீட்டைப் பார்த்தா குடும்பம் நடத்தற மாதிரி தெரியலை.. பிராத்தல் தொழில் நடத்தற மாதிரி தெரியுது.. மரியாதையா உள்ளே இருக்கறவங்களை வரச் சொல்லிடு.. இல்லேன்னா கதவை உடைச்சுத் திறப்பேன்.."

"வே..வேண்டாம் சார்.. நான் உண்மையைச் சொல்லிடறேன்.. தொழில்தான் சார்



பண்றோம்.."

"பண்றோம்னா யாருடா..?"

"என்னோட அக்கா ஜெகதாவும், நானும்.."

"அவ எங்கேடா..?"

"கடைசி ரூம்ல இருக்கா.."

"போய்க் கூட்டிட்டு வாடா.." அவன் ஓடிப் போய் கடைசி ரூமிலிருந்த ஒருத்தியைக் கூட்டி வந்தான். மேலாடை பூர்ணமாய் நழுவியிருக்க தள்ளாடித் தள்ளாடி வந்தாள். போலீஸ் பயம் முகத்தில் கொஞ்சம்கூட இல்லை..

"வாங்க இன்ஸ்பெக்டர்.."

"இங்கே கிருஷ்ணா யாரு..?"

"என் புருஷன் பேருதான் கிருஷ்ணா.. அவன்பேர்ல தான் டெலிபோன் புக் பண்ணியிருக்கோம். ஆனா அவன் செத்து ரெண்டு வருஷமாச்சே.."

"எத்தனை வருஷமா தொழில் பண்றே..?"

"ரெண்டு வருஷமா.. இதோ பாருங்க சார். நாங்க இந்த ஏரியா இன்ஸ்பெக்டர் நாகராஜன்கிட்ட மாமூல் கொடுத்துதான் தொழில் பண்றோம்.."

"அதை அப்புறமாப் பார்த்துக்கலாம்.. நான் கேட்கறதுக்கு மொதல்ல பதில் சொல்லு.."

"ம்.."

"சந்துருவை உனக்குத் தெரியுமா?"

"தெரியாதே.."

"போன வாரம் ஒரு நாள்ல மூணு மணிக்கு போன் பண்ணியிருக்கான்.."

"அவன் எப்படியிருப்பான் இன்ஸ்பெக்டர்.."

இன்ஸ்பெக்டர் சொல்ல ஜெகதாவின் முகம் மலர்ந்தது. உற்சாகமான குரலில் சொன்னாள்.

"ஆமா சார். அப்படி ஒருத்தன் இங்க வந்தான். வெளியே போறதுக்கு ஒரு பொண்ணு வேணும்னான். நாங்க முடியாதுன்னுட்டோம். ஒரு போட்டோவைக் காட்டி இவளத்தான் தேடறேன். இவளும் தொழில்காரிதான். கண்டுபிடிச்சுக் கொடுத்தா பத்தாயிரம் தர்றதாச் சொன்னான். ஆனா அந்தப் பெண்ணை எங்களால கண்டுபிடிக்கவே முடியலை.."

"அதை விசாரிக்கத்தான் அவன் உங்களுக்குப் போன் பண்ணினானா..?"

"ஆமாம்.. ஆள் ரொம்ப ரப்பா இருந்தான்.."

"அவன் தொழில் நடக்கற இடமாப் பார்த்து தேடறான். துப்பாக்கி வெச்சிருக்கான். ஒருவேளை அந்தப் பொண்ணு கெடச்சா அங்கே ஒரு கொலை விழலாம். அதுக்குள்ள நாங்க அவனைப் பிடிச்சாகணும்.."

## 10



கதவை திறந்த லட்சுமண்குமார் அதிர்ந்து போனதுக்குக் காரணம் வெளியே வாசற்படியில் ஒரு பெண் ஒய்யாரமாய் நின்றிருந்தாள். அழகு. நிறம். மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கண்கள். மணக்கும் மல்லிகைச் சரம்.



"ச..சங்கீதா.." அவனுக்கு வியர்த்து நடுங்கியது. "நானேதான்.." சொன்னாள்.

"ஹைதராபாத்தில் இருந்து எப்போ வந்தே..?"

"நேத்து காலைலதான். இப்பதான் இந்தக் கிராமத்துக்கு வந்து சேர்ந்தேன். இந்த கிராமம் ரொம்ப அழகு.. ஆமா.. உள்ளே வான்னு கூப்பிட மாட்டீங்களா..?"

"வா.. வா.. உள்ளே வா.."

அவள் உள்ளே வந்து உட்கார்ந்ததும் கேட்டான். "நர்ஸ் ட்ரெய்னிங் முடிஞ்சதா..?"

"ம்.. முடிஞ்சது.. ஆமா.. ஏன் மூணு மாசமா ஒரு போன்கூடப் பண்ணலை.."

"அ..அதுவா.. இங்க வேலை அதிகம்.. அதனாலதான்.."

"சரி அது போகட்டும். எனக்கு ட்ரெய்னிங் முடிஞ்சது. என்னைக்கு நம்மளோட கல்யாணத்தை வெச்சுக்கலாம்?"

"கல்யாணமா..?"

"அட.. உங்களுக்கு ஏன் மூஞ்சி சுருங்குது.. இது நாம ஏற்கனவே பேசி முடிவு பண்ணினது தானே..?"

"ஆ..மா.."

"பிறகு என்ன தயக்கம்..?"

"நான் மேற்கொண்டு படிக்கலாம்னு இருக்கேன். அதான்..."

"கல்யாணத்துக்கும் படிப்புக்கும் என்ன சம்பந்தம்..? கல்யாணத்துக்குப் பிறகு படியுங்களேன்.."

"இல்ல.. பிறகு உன்னைப் பார்க்கவே நேரம் சரியாயிடும். படிப்பு ஏறாது... அதனால ஒரு ரெண்டு வருஷம் நீ பொறுமையா இருந்தா..."

"லட்சுமண்..." சங்கீதா சட்டென்று அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டாள். குரல் தழுதழுக்க கண்களில் நிறைந்து விட்ட நீரோடு ஏறிட்டாள்.

"லட்சுமண்.. உங்களுக்கு எப்படியோ அப்படியே எனக்கும் யாரும் இல்ல. உங்களை விட்டா.. நாம ரெண்டு வருஷமா காதலிச்சோம்.. கர்ப்பமும் ஆனேன். உங்க கட்டாயத்துனால கலைச்சேன். இதுக்கும் மேல என்னால காத்திருக்க முடியாது.. தயவு செஞ்சு என்னைக் கல்யாணம் பண்ணிக்கங்க.."

"இதோ பார் சங்கீதா.. நம்ம கல்யாணத்துக்கு இப்போ எந்த அவசரமும் கிடையாது.. நீ உடனே சென்னைக்கு கிளம்பிப்போ.. வேலைல சேரு.. இனிமே என்னைப் பார்க்க இங்கே வராதே.. ஏன்னா இது கிராமம்.. ஜனங்க தப்பா நினைச்சுக்குவாங்க.. நம்ம கல்யாணம் கண்டிப்பா நடக்கும். இது சத்தியம்.."

"என்னை மறந்துட மாட்டீங்களே..?"



"ச்சே.. அதுக்கா காதலிச்சோம்.. நானே சென்னைக்கு ட்ரான்ஸ்பர் வாங்க முயற்சி பண்ணிட்டிருக்கேன்.. உன்னப் பார்க்காம என்னாலயும் இருக்க முடியாது..."

"நிஜமாகவா...?"

"பின்னே.. மேற்படிப்புக்காகவும், உன்னைப் பார்க்கறதுக்காகவும் அங்கதானே வரணும்.. சரி நீ கிளம்பு."

* * * * *

சங்கீதா டவுன் பஸ் பிடித்து திருப்பூர் வந்து சேர்ந்தாள். சேலம் பஸ்ஸில் ஏறி சீட் பிடித்து உட்கார்ந்தாள். மனசுக்குள் ஏராளமான குழப்பம்.

'லட்சுமண்குமார் பேச்சிலும் நடத்தையிலும் நிறைய மாறுதல் தெரிகிறது. என்றைக்குமே சங்கீ.. சங்கீ.. என்று உருகி வழிகிறவன்... உயிரே.. உயிரே.. என்று எப்போதும் என்னையே சுற்றி வருகிறவன்.. இன்றைக்கு?'

"எக்ஸ்க்யூஸ்மீ.. இந்தப் பெட்டியைக் கொஞ்சம் நகர்த்தி வைங்க.." குரல் கேட்டு நிமிர்ந்தாள். அவன் நின்றிருந்தான்.

அவள் பெட்டியை நகர்த்த அவன் அடுத்த சீட்டில் போய் உட்கார்ந்தான். டிக்கெட் வாங்குவதற்காக சர்ட் பாக்கெட்டில் ரூபாய் நோட்டை உருவினபோது ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவும் கீழே விழுந்தது.

அதை அவள் உற்றுப் பார்த்ததையும், வியப்போடு எடுத்துக் கொடுத்ததையும் பார்த்து விட்டுக் கேட்டான்.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க.. இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா..?"

"பழக்கமில்லை. பட்.. இப்பதான் அல்லியூர் கிராமத்துல பார்த்தேன்.."

## 11



அவன் ஆச்சர்யமானான். "அல்லியூரா.. அது எங்கே இருக்கு..?"

"இங்கிருந்து அஞ்சு கிலோ மீட்டர் தூரம்.." அவள் சொன்னதும் அவன் பதட்டமானான்.

"அல்லியூர்ல இவளை எங்கே பார்த்தே..?"

"நான் வர்றபோது இவள் ஒரு காரில் ஏறிக் கொண்டிருந்தாள்.."

"நீ சொல்றது நிஜமா..?"

"ஆமா.."

அவன் பதட்டத்துடன் எழுந்து நின்று டிரைவரை நோக்கிக் குரல் கொடுத்துக் கொண்டே கீழே இறங்கினான்.

கண்டக்டர் திரும்பிப் பார்த்தார். "சேலம் போறதுக்கு டிக்கெட் வாங்கிட்டு ஏன்யா இங்கேயே இறங்கறே..?" என்று சொல்லிவிட்டு விசில் கொடுத்தார்.

* * * * *

பிரதீபா சித்தியைக் கட்டிப் பிடித்து முத்தமழை பொழிந்தாள்.



"சித்தி. இதை நான் எதிர்பார்க்கவே இல்லை. என்னோட காதலை ஒத்துகிட்ட துக்காக கோடி கோடி தேங்ஸ்.."

"வர்ற பதினாலாம் தேதி கல்யாணத்தை வெச்சிருக்கேன். ஒரு மாசம் தள்ளிப் போயிடுச்சேன்னு என்மேல கோபம் ஒண்ணும் இல்லையே..?"

"போ.. சித்தி.." என்று முகம் சிவக்க வெட்கப்பட்டு கல்லூரிக்குக் கிளம்பினாள் பிரதீபா.

அப்போது பண்ணையாள் சின்னைய்யன் வந்தான். "அம்மா.. நம்ம ரெண்டு கறவை மாடுகளும் ரொம்ப கழிச்சல். டாக்டரைக் கூட்டிகிட்டு வந்து காட்டலைன்னா அறியாயமா.. போயிடும்மா.."

வாசுகி பரபரத்தாள். "என்ன சின்னய்யா.. இது.. போய் சீக்கிரமா டாக்ரைக் கூட்டிட்டு வந்து காட்டு.. போ.." அவனை விரட்ட சின்னய்யன் தலைக்கு முண்டாசைக் கட்டிக் கொண்டே வேகவேகமாய் வெளியேறினான்.

பத்து நிமிடத்திற்குள் லட்சுமண்குமாரோடு வந்து சேர்ந்தான்.

"வாங்க டாக்டர்.. ரெண்டு கறவை மாடுகளும் கழிச்சல் போகுதாமே..?"

"இந்த மழை சீசன்ல மாடுகளுக்கு கழிச்சல் வந்தா ரொம்ப ஆபத்தாச்சே.." சொல்லிக் கொண்டே சின்னய்யனுக்குப் பின்னால் மாட்டுக் கொட்டிலுக்குப் போனான் லட்சுமண் குமார். வாசுகியும் தொடர்ந்தாள்.

லட்சுமண்குமார் மாடுகளைச் சோதித்து விட்டு பிரிஸ்கிரிப்ஷன் தாளில் ஒரு மருந்தின் பெயரை எழுதி சின்னய்யனிடம் நீட்டினான்.

"இந்த மருந்து கோயமுத்தூர்லதான் கிடைக்கும். நீ உடனே பஸ்ஸைப் பிடிச்சுப் போய் வாங்கிட்டு வந்திடு.. இன்னும் ஆறு மணி நேரத்துக்குள்ள போடணும்.."

அவன் வாங்கிக் கொண்டு ஓடியே போனான். பிறகு லட்சுமண்குமார் பிரதீபாவை ஏறிட்டான்.

"பிரதீபா காலேஜ் போயிட்டாளா..?"

"இப்பதான் போனா.. வீட்டுக்குள்ளே வாங்க டாக்டர்.."

இருவரும் உள்ளே போனார்கள். லட்சுமண் குமார் சிரித்துக் கொண்டே வாசுகியை மெல்ல அணைத்தான்.

"இதுமாதிரி ஒரு சந்தர்ப்பம் கிடைச்சு எத்தனை நாளாச்சு.. பெட்ரூமுக்குப் போயிடலாமா..?"

"லட்சுமண்.."

"ம்.."

"உங்களுக்கும் பிரதீபாவுக்கும் கல்யாணம் நடக்கற வரைக்கும் நாம கொஞ்சம் எட்டியே இருக்கறது பெட்டர். பண்ணையிலிருந்து யாராவது ஒருத்தர் எதையாவது கேட்டு வந்துகிட்டேயிருப்பாங்க.."

"வரட்டுமே.. நான் உள்ளேயிருக்கறது எப்படித் தெரியப் போகுது..?"



"சரிசரி.. நீங்க ரூம்ல போய் இருங்க. நான் காம்பவுண்ட் கேட்டையும் வாசல் கதவையும் சாத்தி தாழ் போட்டுட்டு வர்றேன்..".

"சீக்கிரம் வா வாசுகி.." அவன் அவசரப்படுத்த சிரித்துக் கொண்டே ஹாலைக் கடந்து வெளியே போய் காம்பவுண்ட் கேட்டையும், வாசல் கதவையும் தாழிட்டு விட்டு உள்ளே வந்தாள். காத்திருந்த லட்சுமண்குமார் அவளைத் தாவி அணைத்து கட்டிலுக்குத் தூக்கிப் போனான்.

"இந்தப் பட்டு உடம்பைத் தொட்டு எத்தனை நாளாச்சு...?" சொல்லி வாசுகியின் சேலையை உருவிய கணத்தில் காலிங்பெல் ர்ர்ர்ரென்றது.

வாசுகி திடுக்கிட்டாள். வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தாள். "ஐயையோ.. யாரோ வந்துட்டாங்க போலிருக்கே.."

"அட... ஏன் இப்படி பதர்றே.. சேலையை ஒழுங்காக் கட்டிக்கிட்டுப் போய் கதவைத் திறந்து யார்னு பாரு.. எவனாவது பண்ணையாளா இருக்கப் போறான்.."

வாசுகி பரபரவென்று சேலையைச் சுற்றிக் கொண்டு ட்ரஸ்ஸிங் டேபிளுக்கு முன் நின்று சரிப்படுத்திக் கொண்டு வாசல் கதவை நோக்கி வேகவேகமாய்ப் போனாள். கதவைத் திறக்க வேலையாள் சின்னய்யன் நின்றிருந்தான். அவன் கையில் மருந்து பாக்கெட்.

"எ..என்ன சின்னய்யா..?"

"அம்மா டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்து

திருப்பூர்லயே இருந்தது. ஒரு ஒசி பைக் கிடைச்சது. தொத்திட்டுப் போயிட்டு வந்துட்டேன்.."

"சரி. மருந்தை என்கிட்டக் கொடு.."

"டாக்டர் போயிட்டாராம்மா.."

"ம். போயிட்டார்.."

"நான் போய் டாக்டரைக் கூட்டிட்டு வரட்டுமாம்மா.."

"வேண்டாம். அவரே வந்திடுவார்..."

"அப்ப மாட்டுக்கு தீவனம் வெச்சுப் பார்க்கட்டுமா..?"

"வேண்டாம். நீ பண்ணைக்குப் போ.."

"அம்மா. மாடுக ரெண்டும் ரொம்பப் பாவம்மா.."

"அது எனக்குத் தெரியும்.. நீ பண்ணைக்குப் போ.. சொன்னதை மட்டும் செய்..."

"ச..சரிங்கம்மா.." அவன் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டே போக, வாசுகி கதவைத் தாழிட்டு விட்டு உள்ளே போனாள்.

"வாசுகி வந்தது யாரு..?"

"சின்னைய்யன். மருந்தை வாங்கிட்டு வந்துட்டான்."

"இன்னிக்கு நமக்கு நேரமே சரியில்லை போலிருக்கு.. ஏதாவது தடங்கல் வந்துட்டே இருக்கு.."

"இனிமே வராது.." மருந்தை



மேஜையின்மேல் வைத்து விட்டு லட்சுமண் குமாரைத் தழுவி இறுக்கி அணைத்து அந்த சுகத்தில் கண் மூடித்திறந்தாள். பார்வை மேலேயிருந்த வெண்டிலேட்டருக்குத் தாவ துல்லியமாய் அதிர்ந்தாள். மேலே ஒரு முகம் அவளை உற்று நோக்கியது.

## 12



"ஏய்.. யாரது..?"

"எ..எ..என்ன வாசுகி..?" லட்சுமண்குமாரும திடுக்கிடலோடு கட்டிலிலிருந்து எழுந்து உட்கார்ந்தான்.

"யார்னு தெரியலை.. நம்ம ரெண்டு பேரையும் பார்த்துட்டா.. ஒரு பெண்.."

லட்சுமண்குமார் அவசர அவசரமாய் பேண்ட்டைப் போட்டுக் கொண்டு வாசல் கதவை நோக்கி ஓடினான். காம்பவுண்ட் கேட் அருகே ஒரு பெண் வேகவேகமாய்ப் போய்க் கொண்டிருப்பது தெரிந்தது.

"ச..ங்...கீ...தா..." லட்சுமண்குமார் குரல்கொடுக்க அவள் நின்றாள். திரும்பிப் பார்த்தாள். அவன் குரல் கொடுத்தான். "வா இங்கே.."

சங்கீதா மெதுவாய் நடந்து வந்தாள். பார்வையில் உக்கிரம் தெரிந்தது. "நீயெல்லாம் ஒரு மனுஷனா..?"

"சங்கீதா. நீ என்னைத் தப்பா புரிஞ்சிட்டே..

உள்ளே வா. விபரம் சொல்றேன்.."

"என்ன சொல்லப் போறீங்க.. மாட்டுக்கு வைத்தியம் பார்க்க வந்தேன். வந்த எடத்துல எஜமானிக்கும் சேர்த்து வைத்தியம் பார்க்க வேண்டியதாயிடுச்சன்னா. த்தூ- இங்க நின்னா எனக்குதான் அவமானம்.. நான் போறேன்.."

சொல்லிக்கொண்டே சங்கீதா திரும்பிய அதே விநாடி லட்சமண்குமார் அவள்மேல் பாய்ந்து வாயைப் பொத்தினான். அவள் திமிற அந்தத் திமிறலை அடக்கி அவளுடைய உடம்பை தன் மேல் சரித்துக் கொண்டு உள்ளே போனான். வாசுகி கதவைச் சாத்தினாள்.

சங்கீதாவை சோபாவில் போட்டான். "வெளியே போய் நீதி கேட்கப் போறியா..? ஊருக்குப் போறேன்னு சொல்லிட்டு என்னை வேவு பார்க்க வந்தியா..?"

"இல்லை.. நான் இவளைப் பார்க்க வந்தேன்.." என்று வாசுகியைக் கை காட்டினாள்.

"என்னையா.. எதுக்காக..?"

"திருப்பூர் பஸ் ஸ்டாண்ட்ல ஒருத்தன் உன்னோட போட்டோவை வெச்சுத் தேடிட்டு இருந்தான். என்னைக் கூடக் கேட்டான். நான் இந்த ஊர்ல பார்த்தேன்னு சொன்னேன். உடனே அவன் பஸ்ல இருந்து எறங்கிட்டான். அதான் அவனால ஏதாவது உனக்கு ஆபத்து வருமோன்னு சந்தேகப்பட்டு தேடிட்டு வந்தேன். பிறகு இந்த லட்சமண்குமாரோட வேலை என்னன்னும் தெரிஞ்சிட்டேன்.."



"வாசுகியோட போட்டோவை வெச்சிருந்த வன் யாரு?"

"தெரியாது.."

"ஆள் எப்படி இருந்தான்..?"

"இதெல்லாம் எனக்குத் தேவையில்லாத விஷயம். நீங்க எப்படியோ போங்க.. நான் வர்றேன்.."

சொல்லிக் கொண்டே வாசலை நோக்கிப் போன சங்கீதாவை மறித்தான் லட்சமண் குமார். "சாரி.. சங்கீதா.. நீ வெளியே போக முடியாது.."

"ஏன்..?"

"நீ வெளியே போனா எனக்கும் வாசுகிக்கும் உள்ள உறவு இந்தக் கிராமம் பூராவும் வெட்ட வெளிச்சமாயிடும்."

"நான் யார்கிட்டயும் சொல்ல மாட்டேன்."

"உன்னை நம்ப முடியாது.. வாசுகி. இவளை என்ன பண்ணலாம்..?"

"லட்சமண் எனக்கு பயமாயிருக்கு. யாரோ ஒருத்தன் என் போட்டோவை வெச்சுத் தேடிட்டிருக்கானாமே..?"

"இவளுக்குத் தெரிஞ்சிருக்கும்.. சொல்லுடி.. யாரவன்..?"

"எனக்குத் தெரியாது.."

"இப்படிக் கேட்டா இவ சொல்ல மாட்டா.." என்று அவளைத் தள்ளிக் கொண்டு போய் சுவரோடு சுவராய் அறைந்தான்.

"எங்களை வேவு பார்க்க வந்துட்டு கதையாடி அளக்கறே.. சொல்லுடி நாயே.. யாரவன்..?"

"அ..து.. வந்..து..." மூச்சுத் திணறி அப்படியே சரிந்தாள்.

"லட்சுமண் என்னாச்சு.. இவளுக்கு..?"

"மயக்கம்தான்.. இவளை உயிரோட விட்டா ஆபத்து நமக்குத்தான்.."

"அதனால.."

"இந்த வீட்டுக்குப் பின்னாடி இருக்கற விஷவாயு கிணத்துக்குள்ள இவ பாடியைத் தூக்கிப் போட்டுடலாம்.."

"லட்சுமண்.."

"ம்."

"எவனோ ஒருத்தன் என் போட்டோவை வெச்சுத் தேடிட்டு இருந்தானாமே.. அவனை எப்படிக் கண்டு பிடிக்கறது..?"

"மொதல்ல இவ கதை முடியட்டும். பிறகு அவன் யார்னு தேடுவோம்.."

## 13



லட்சுமண்குமார் சுவரோரமாய் கிடந்த சங்கீதாவை அப்படியே அள்ளினான். வாசுகி வியர்த்து வழிந்து கொண்டே லட்சுமண் குமாரின் முதுகைத் தொட்டாள். "எனக்குப் பயமாயிருக்கு லட்சுமண்.."



"எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன். நீ சும்மா வேடிக்கை மட்டும் பாரு.. போதும்.."

"வாசுகி.. இனிமே சங்கீதாவுக்கு ஜல சமாதிதான். வீட்டுக்குப் பின் பக்கமாய்ப் போய் யாராவது இருக்காங்களான்னு பார்த்துட்டு வா.."

"யாரும் இருக்க மாட்டாங்க லட்சுமண். ஏன்னா எல்லாரையும் வெளி வேலைக்கு அனுப்பிட்டேன்..."

"சரி. நீ முன்னாடி போய் கிணத்துக்குப் பக்கத்துல நில்லு.. நான் இவளைத் தூக்கிட்டு வர்றேன்.."

இருவரும் வீட்டின் பின்பக்கம் மண்டியிருந்த வாழை மரங்களுக்கு மத்தியில் நடந்து கிணத்து மேட்டைத் தொட்டார்கள். லட்சுமண் சங்கீதாவைக் கிடத்திவிட்டு பருத்திக்கொட்டை அரைக்கும் பெரிய குழவிக் கல்லையும் தாம்புக்கயிற்றையும் கொண்டு வந்தான். குழவிக்கல்லை சங்கீதாவின் இடுப்போடு சேர்த்துக் கட்டிவிட்டு கிணற்றை எட்டிப் பார்த்தான்.

"தள்ளிடலாமா..?"

"ம்.."

சில விநாடிகளுக்குப் பின் "டொம்ம்ம்..." என்ற ஒரு சத்தம். பிறகு நிசப்தம்.

லட்சுமண்குமாரும், வாசுகியும் பெருமூச்சுகளோடு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

* * * * *

**மா**லை 4 மணி. கல்லூரியிலிருந்து திரும்பியிருந்தாள் பிரதீபா. "சித்தி. எனக்கு சூடா காபி வேணும்.. தலையெல்லாம் ஒரே வலி.. மண்டையில் இருக்கற எல்லா நரம்பும் விண்ணுன்னு தெறிக்குது."

"தர்றேன்.." சொல்லிவிட்டு சமையலறை பக்கம் போக முயன்ற வாசுகியை "நில்லு சித்தி.." என்று நிறுத்தினாள். "என்ன பிரதீபா..?"

"என் சித்தி. என்னவோ போல் இருக்கே..?"

"ஒ..ஒண்ணுமில்ல.. நல்லாத்தானே இருக்கேன்.."

"நோ.. நோ.. பத்து நாள் காய்ச்சல்ல கிடந்த மாதிரி..."

"உங்கப்பா ஞாபகம்.. வந்திடுச்சு.."

"என்னது.. அப்பா ஞாபகமா?"

"ஆமா. அவர் உயிரோட இருந்திருந்தா உன் கல்யாணத்தை எப்படி ஜாம் ஜாம்னு பண்ணுவார்னு நினைச்சேன்.."

"அதான் நீ இருக்கியே.. அதையெல்லாம் நீ பண்ணு.."

"இருந்தாலும் உங்கப்பா மாதிரி.."

"விடு சித்தி.. எனக்கு இப்போ காபி வேணும்.."

"நீ போய் படுத்துக்க.. நான் காபி கொண்டு வர்றேன்.."

"ம்.ம்.."



பத்து நிமிஷம் கழித்து ஆவி பறக்கும் காபியோடு வாசுகி வந்தபோது பிரதீபா கட்டிலில் உட்கார்ந்திருந்தாள்.

"இந்தா காபி.."

"இப்படி உட்காரு சித்தி.."

"என்ன...?"

"உட்காரு சொல்றேன்.."

"ம்.. சொல்லு.." உட்கார்ந்தாள். அவள் மனசு திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

"இப்போ நான் கேட்கப் போற கேள்விகளுக்கு உண்மையை மட்டும் சொல்லு.. இந்த பெட்ரூமுக்குள்ள யாராவது வந்தாங்களா..?"

"இ..இல்லையே..?"

"உன் ரெண்டு கையையும் காட்டு.."

காட்டினாள். "எந்தக் காயமும் இல்லை.. பின்னே எப்படி இந்தத் தலையணையில் ரத்தம் வந்தது..?" சொல்லிக் கொண்டே பக்கத்திலிருந்த தலையணையை எடுத்துத் திருப்பிப் போட்டாள் பிரதீபா.

வாசுகி திடுக்கிட்டாள். மனசுக்குள் அலாரம் அடித்தது. 'இந்தத் தலையணையை எப்படி கவனிக்க மறந்தோம்..'

"பி...ர..தீ...பா..." பேசத் திணறினாள். தொண்டை அடைத்துக் கொண்டது.

"சொல்லு சித்தி.. எப்படி தலையணையில் ரத்தம் வந்தது?"

# 14



**வா**சுகியின் இதயம் அதிர்ச்சியில் ஸ்தம்பித்தது. துளித்துளியாய் ரத்தம் படிந்திருந்த அந்தத் தலையணையைத் திகிலோடு பார்த்தாள். பிரதீபா சித்தியின் முகத்தை ஏறிட்டாள்.

"என்ன சித்தி.. என்னவோ போல் ஆயிட்டே... தலையணையில் எப்படி ரத்தம் வந்தது?"

"அ..அது வந்து.. பிரதீபா.. மத்தியானம் திடீர்னு வாந்தி வர்ற மாதிரி ஒரு பீலிங்.. உடனே தலையணையை எடுத்து வாய்ல பொத்திக்கிட்டேன். அப்போ இருமல் வந்து நாக்கைக் கடிச்சிட்டேன். அதுல வந்த ரத்தம்தான் போலிருக்கு.."

"அதுவா சமாச்சாரம்.. நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன்.. உன் உடம்பு லேசா சுடுது சித்தி.. வா டாக்டர்கிட்டப் போகலாம்.."

"வேண்டாம் பிரதீபா. மாத்திரை போட்டுப் படுத்தா சரியாகிடும். நீ மொதல்ல காப்பியக் குடி.. தலைவலின்னு சொன்னியே..?"

பிரதீபா காபியை எடுத்துக் குடித்தாள். டெலிபோன் ஒலிக்க வாசுகியே எடுத்துப் பேசினாள்.

"அம்மா நாங்க திருப்பூர் துணிக்கடையில இருந்து பேசறோம்.. புதுப்பட்டுப் புடவை வந்தா தகவல் கொடுக்கச் சொன்னீங்க.



ரெண்டு பெட்டி வநதிருக்கு. பார்க்க வர்றீங்களாம்மா.."

"வர்றோம். ஆறு மணிக்கும் மேல வர்றோம்.." ரிசீவரை வைத்துவிட்டு பிரதீபாவிடம் வந்தாள் வாசுகி.

"பிரதீபா.."

"ம்.."

"உனக்குக் கல்யாணப் பட்டுப்புடவை எடுக்க ஆறு மணிக்கு மேல நாம திருப்பூர் போறோம்.."

"போகலாம் சித்தி. புடவை செலக்ஷன் பண்றதுல டாக்டர் ரொம்பவும் கெட்டிக்காரர். அவரையும் கூட்டிட்டுப் போகலாமா..?"

"வேண்டாம் பிரதீபா. அது கல்யாணத்துக்கு முன்னாடி சரிப்பட்டு வராது.."

"சரி சித்தி" ஏமாற்றம் கப்பின முகத்தோடு காபி தம்ளரை வைத்துவிட்டு குளியலறை நோக்கிப் போனாள் பிரதீபா.

* ****

**ம**றுநாள் காலை பத்து மணி. பிரதீபா கல்லூரிக்குப் புறப்பட்டுப் போயிருக்க... வாசுகி பண்ணையாள் சின்னையனோடு நின்று பேசிக் கொண்டிருந்தாள்.

"சின்னைய்யா.."

"அம்மா.."

"டாக்டர் கொடுத்த மருந்துல மாடு தேறிடுச்சல்ல.."

"ஆமாங்கம்மா.."

"சின்னய்யா.. பிரதீபாவோட கல்யாணம் பக்கத்துல வந்தாச்சு.. வீட்டையும் சுற்றுப் புறத்தையும் கொஞ்சம் சுத்தப்படுத்தனும்.."

"பண்ணிடலாம்மா..."

"முதல் காரியமா அந்தக் கிணற்றை மூடணும்.. அது விஷக்கிணறுன்னு எல்லோரும் சொல்றாங்க.."

"வேண்டாம்மா.. கவர்மெண்ட்டுல பொது பணித்துறைக்கு எழுதிப் போட்டா அவங்களே வந்து சுத்தப்படுத்திக் கொடுத்திடுவாங்க அதுக்குண்டான பணத்தை மட்டும் கட்டினாப் போதும்மா.. அது பரம்பரை பரம்பரையா பாதுகாத்து வந்த கிணறு.."

மேற்கொண்டு பேச முயன்ற சின்னய்யனை கையை உயர்த்தி அமர்த்தினாள். "உன்கிட்டே உபதேசம் கேட்கவா நான் இங்கே நின்னுட்டிருக்கேன். இந்த வீட்டுக்கு நீ முதலாளியா.. இல்ல நானா...?"

"அம்மா.."

"நான் என்ன சொல்றேனோ.. அதை மட்டும் செய்.. இன்னும் ஒரு வாரத்துல இந்த கிணத்தை மூடியாகணும்.."

"ஒரு வாரத்துல கிணத்தை மூடணும்னா நிறைய ஆட்கள் வேணும்.. செலவாகும்.."

"ஏற்பாடு பண்ணு. கணக்குப் பிள்ளைகிட்ட கேட்டு வாங்கிக்கோ.."

"குட்மார்னிங் மிஸஸ் வாசுகி.."



பின்பக்கம் குரல் கேட்க, வாசுகி திரும்பிப் பார்த்தாள். லட்சுமண்குமார் கையில் மெடிக்கல் கிட்டோடு வந்து கொண்டிருந்தான்.

"வாங்க டாக்டர். குட்மார்னிங்.."

லட்சுமண்குமார் சின்னய்யனிடம் திரும்பினான். "என்னப்பா.. மாடு ஒழுங்கா தீனி தின்னுதா..?"

"நல்லாத் தின்னுதய்யா..."

"மருந்தை நிறுத்திடாதே.. இன்னும் ரெண்டு நாளைக்கு தீவனத்துல கலந்து கொடு. கழிச்சல் சுத்தமா நின்னுடும்."

"சரிங்கய்யா.."

"ஸாரி மிஸஸ் வாசுகி.. நீங்க ஏதோ சின்னையன்கிட்ட முக்கியமா பேசிட்டிருக்கும் போது நான் வந்துட்டேன்.."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை டாக்டர்.. அந்த விஷக்காத்து நிரம்பியிருக்கற அந்தக் கிணற்றை மூடிடலாம்னு சொல்லிட்டு இருந்தேன்."

லட்சுமண்குமார் சிரித்தான். "நான் அன்னிக்கே சொன்னேன். கிணத்தை சுத்தம் பண்ணி உபயோகம் பண்றதா இருந்தா பண்ணுங்க. இல்லைன்னா மூடி தரை மட்டமாக்கி தோட்டம் போட்டுடுங்கன்னு.."

"இன்னும் ஒரு வாரத்துல அதைத்தான் பண்ணப் போறோம் டாக்டர். இனிமே சின்னையனுக்கு அதுதான் வேலை. சின்னைய்யா.. நாளைக்கு கூலியாட்களும்,

மண் லாரியும் இங்கே இருக்கணும் புரியுதா..?"

"சரிங்கம்மா..." பவ்யமாய்ச் சொல்லிவிட்டு சின்னையயன் நகர், லட்சமண்குமார் ஆரம்பித்தான்.

"ஏன் வாசுகி கிணத்தை மூடணும்..?"

"சங்கீதாவோட பெட்பாடி மேல வந்துட்டா..?"

"எப்படி மேல வரும்..? கல்லைக் கட்டிப் போட்டிருக்கோம்ல.."

"எனக்கு பயமா இருக்கு டாக்டர்.. நேத்து தலையணை ரத்தத்தைப் பிரதீபா பார்த்து கேள்விமேல கேள்வி கேட்டா.."

"எப்படி சமாளிச்சே?"

"எப்படியோ சமாளிச்சிட்டேன்."

"அதான் எப்படின்னு கேட்கறேன்..."

"பயங்கரமா இருமல் வந்து அதை அடக்க தலையணையை எடுத்து முகத்துல வெச்சேன். அப்ப பல் நாக்குல பட்டு ரத்தம் வந்துடுச்சு.. அதான் இந்த ரத்தம்னு சொன்னேன். அவளும் நம்பிட்டா..."

"நீ அநாவசியமா பயப்படறே வாசுகி.." அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே உள்ளே டெலிபோன் வீறிட வாசுகி போய் எடுத்துப் பேசினாள்.

"ஹலோ.."

"நான் சந்துரு.." ஒரு குரல் கரகரத்தது. அந்தப் பெயரைக் கேட்டதும் வாசுகியின் ரத்த



நாளங்களில் ரத்தம் ஸ்தம்பித்தது. அவள் சுவாசிக்கத் திணறினாள்.

## 15 

"யாரர்.. நீ..?" வாசுகி திணறலான குரலில் கேட்டாள். டெலிபோனின் மறுமுனை சிரித்தது.

"சந்துருன்னு சொன்னேனே.. காது கேட்கலையா..?"

"நீ..நீ..நீ...?"

"இன்னும் உயிரோடதான் இருக்கேன் வாசுகி.."

"வந்து.. வந்து .. நீ இப்போ எங்கேயிருந்து பேசறே..?"

"உன்னோட ஊர்ல இருந்துதான் பேசறேன்.."

"ச..ச..சந்துரு.."

"என்ன..?"

"நான் உன்கிட்டே கொஞ்சம் தனியாகப் பேசணும்.."

"நானும் உன்கிட்ட பேசறதுக்காகத்தான் வந்திருக்கேன் வாசுகி.."

"என் வீடு உனக்குத் தெரியுமா?"

"நல்லாத் தெரியும்..."

"மத்தியானம் ஒரு மணியிலிருந்து இரண்டு மணிக்குள்ள வா.."

"வர்றேன்.." அவன் ரிசீவரை வைத்துவிட வாசுகியும் தன் வியர்த்த முகத்தைத் துடைத்துக் கொண்டே ரிசீவரை வைத்தாள். லட்சுமண்குமார் உள்ளே வந்தான்.

"போன்ல யாரு வாசுகி..?"

"தி..தி..திருப்பூர் ஜவுளிக்கடையில இருந்து பேசறாங்க.. சாயந்திரம் போகணும்.."

லட்சுமண் புன்னகைத்து அவள் கன்னத்தில் தட்டினான். "அதுக்கு ஏன் இப்படி வேர்த்து வழியறே.. போன்ல யாரோ மிரட்டின மாதிரி.. வா.. கொஞ்ச நேரம் சந்தோஷமா இருக்கலாம்.." அவள் தோளில் கை வைத்தான். அவள் தட்டி விட்டாள்.

"வேண்டாம். எம்மனசுக்கு இப்ப இதெல்லாம் பிடிக்கலை. கல்யாணம் முடியட்டும்.. இங்க வேற யாருக்காவது தெரிஞ்சிட்டா எல்லாமே பாழாகிடும்.."

"யாருக்கும் தெரியாது வாசுகி.."

"ப்ளீஸ்.. நீங்க கிளம்புங்க டாக்டர். கல்யாணம் முடியற வரைக்கும் நாம கொஞ்சம் கட்டுப்பாட்டோடவே இருக்கணும்.."

"இட்ஸ் ஓ.கே. உன்னோட சந்தோஷம்தான் எனக்கு முக்கியம்.." சொல்லிவிட்டு கிளம்பினான் லட்சுமண்.

* * * * *

மத்தியானம் இரண்டு மணி. அவன் அந்த



காம்பவுண்ட் கேட்டுக்குள் நுழைந்து சாவதானமாய் நடந்து வாசற்படி ஏறி கதவின் வலப்பக்கம் தெரிந்த காலிங்பெல்லில் கையை வைத்தான். அது கத்துவதற்கு முன்பே கதவு திறந்தது. நெற்றியிலே கோர்த்த வியர்வை யோடு வாசுகி வந்தாள்.

"வா.. சந்துரு..." கதவைச் சாத்தி தாழிட்டாள்.

"நா.. நான்.. உன்னை எதிர்பார்க்கலை.. நீ செத்துட்டதா மிலிட்டரியிலிருந்து..."

"தந்தி வந்ததா..?"

"ஆ..ஆமா.."

"அதை நீயும் என்னோட தங்கச்சி ரமாவும் நம்பிட்டீங்களாக்கும்..?"

"ஆ..ஆமா.."

அவன் ஹாலில் இருந்த சோபாவில் போய் உட்கார்ந்து கொண்டான். கால்மேல் கால் போட்டபடி கேட்டான்.

"அதான் இனிமே நான் வரமாட்டேங்கற தைரியத்துல, என்னோட தங்கச்சியை நம்ம ஊர்க்கு சினிமா எடுக்க வந்த அந்த டைரக்டருக்குக் கூட்டிக் கொடுத்தியா..?"

"சந்துரு.. நான் சொல்றதைக் கொஞ்சம் நிதானமாகக் கேள்.."

"என்ன...?"

"என்மேல எந்தத் தப்பும் இல்ல. உன்னோட தங்கச்சிதான் அந்த டைரக்டரை நம்பி மோசம்

போயிட்டா. நான் ஏற்கனவே என்னை அவன்கிட்ட இழந்ததைப் பத்திச் சொன்னேன். ஆனா அவ நம்பலை. பிறகு அவன் ஏமாத்துப் பேர்வழின்னு தெரிஞ்சதும் தூக்குல தொங்கிட்டா. அதனால என்னோட பேர் கெட்டுடுச்சு.."

சந்துரு கண்கள் சிவக்க அவளை ஏறிட்டான்.

"வாசுகி.. நீ சொல்றதை நம்ப நான் ஒண்ணும் சின்னக் குழந்தை கிடையாது. கடந்த ரெண்டு மாசமாகவே உன்னை பலான இடங்களில் தேடிட்டு வர்றேன். உன்னைக் கொல்றதுக்காகவே துப்பாக்கியைத் தயாராக வெச்சிருக்கேன். நீ ஊர்ல இருக்கும்போதே தொழில் பண்ணிட்டிருந்தே. இன்னும் நீ அதே தொழில்லதான் இருப்பேன்னு நினைச்சேன். ஆனா நீ இப்ப இவ்வளவு பெரிய சொத்துக்கு அதிபதியா இருக்கே.. இந்த வாழ்க்கை உனக்கு எப்படிக் கெடைச்சது?"

"சந்துரு.. அதுக்குப் பிறகு நான் மும்பைக்குப் பயணம் ஆனேன். அங்கேதான் இந்த குமாரசாமியைச் சந்திச்சேன். அவருக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட்டேன். அந்த வாழ்க்கை கொஞ்ச நாள்கூட நீடிக்கலை. அவர் ஹார்ட் அட்டாக்கில் போயிட்டார்.."

"பிரதீபாங்கறது முதல் தாரத்துப் பொண்ணா..?"

"ஆமா.. இன்னும் ரெண்டு வாரத்துல கல்யாணம். அவ எம்மேல உயிரையே வெச்சிருக்கா..."



"நீ பழைய தொழில்காரின்னு அவளுக்குத் தெரியுமா?"

"தெரியாது. அவளுக்கு மட்டுமல்ல. இந்த ஊர்ல யாருக்குமே தெரியாது. உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேன். என்னைக் காட்டிக் கொடுத்துடாதே.."

"நான் உன்னைக் காட்டிக் கொடுக்கக் கூடாதுன்னு நீ நினைச்சா.. எனக்கொரு உதவி பண்ணணும்.."

"என்ன உதவி.. பணம் வேணுமா?"

"என்னோட தங்கச்சி ரமா கெட்டுப் போறதுக்கும், தற்கொலை பண்ணிகிட்டு செத்ததுக்கும் காரணம் நீ இல்லைன்னு நிரூபி. உன்னை விட்டுடறேன்.."

"சந்துரு.. என் பேச்சில் உனக்கு நம்பிக்கையில்லையா?"

"இல்லை. இப்பவே என்கூட புறப்பட்டு வா. நம்ம ஊர்ல ரெண்டு பெரியவங்களைச் சொல்லச் சொல்லு.. நான் அந்த நிமிஷமே மிலிட்டரிக்குப் புறப்பட்டுப் போயிடறேன். உன்னால நிரூபிக்க முடியலைன்னா நாயைச் சுடற மாதிரி நடுத்தெருவுல சுடுவேன்.."

"சந்துரு... எனக்கு ரெண்டு வாரம் டயம் கொடு.."

"எதுக்கு..?"

"பிரதீபாவோட கல்யாணம் முடியட்டும். நான் உன்கூட ஊருக்கு வந்து எம்பேர்ல எந்தத் தப்பும் இல்லைன்னு நிரூபிக்கறேன்."

"அப்படின்னா அதுவரைக்கும் நானும் இங்கேயே இருக்கேன்.."

"வே..வேண்டாம்.."

"ஏன்.?"

"யாராவது கேட்டா நான் என்ன பதில் சொல்லுவேன்..?"

"அது எனக்குத் தெரியாது. நான் இங்கே தங்கறதா முடிவு பண்ணிட்டேன். கல்யாணம் முடிஞ்ச மறுநாளே நீ என்கூடப் புறப்பட்டு வரணும்.."

"சந்துரு. நீ இந்த வீட்ல தங்க வேண்டாம்.. பண்ணையில ஒரு வீடு இருக்கு. அங்கே தங்கிக்க. என்னோட ஊர்க்காரன்னு நான் சொல்லிக்கறேன்.."

"சரி.."

அப்போது காலிங்பெல் அடிக்க வாசுகி முந்தாணையை எடுத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டு போய்க் கதவைத் திறந்தாள். வெளியே போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் நின்றிருந்தார். வாசுகி அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் கேட்டாள். "என்ன வேணும்..?"

"நேத்திக்கு மத்தியானம்.. சங்கீதான்னு ஒரு பொண்ணு இங்கே வந்தாளா..?"

இன்ஸ்பெக்டர் கேட்ட கேள்வியில் நிலைகுலைந்து போனாள் வாசுகி. உடம்பில் பரவிய நடுக்கத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இயல்பான குரலில் கேட்டாள்.



"பேர் என்ன சொன்னீங்க..?"

"சங்கீதா.."

"அப்படி யாரும் இங்கே வரலையே..?"

"சாரி.. உங்களுக்குத் தொந்தரவு கொடுத்திட்டேன்.." என்று நகர முயன்றவரை "ஒரு நிமிஷம்" என்று நிறுத்தினாள் வாசுகி.

"எஸ்.."

"அந்தப் பெண் எங்க வீட்டுக்குத்தான் வந்தாள்னு யார் சொன்னா.. இன்ஸ்பெக்டர்..?"

"மேடம்.. சங்கீதாங்கற பெண்ணை தேடிட்டு சென்னையிலிருந்து சித்ராங்கற பொண்ணு வந்திருக்கா.. அவ ஊர் பூராவும் தேடிப்பார்த்துட்டு சந்தேகப்பட்டு ஸ்டேஷன்ல கம்ப்ளைண்ட் கொடுத்திருக்கா. பிறகு நம்ம ஊர் போஸ்ட்மேன் ஒரு பொண்ணு உங்க வீட்டு வாசல்ல நின்னதா வேற சொன்னாரு.. அதான் விசாரிச்சிட்டுப் போகலாம்னு வந்தேன்.."

"நோ. இன்ஸ்பெக்டர். அந்த மாதிரி யாரும் வரலை. பட். வழி தெரியாம எங்க வீட்டு வாசல்ல நின்னு தேடியிருக்கலாம்."

"ஓ.கே. நான் பார்த்துக்கறேன்.." இன்ஸ்பெக்டர் நகர்ந்து போக வாசுகி உள்ளே வந்தாள். உள்ளே உட்கார்ந்திருந்த சந்துரு கேட்டான். "எதுக்காக அந்த எஸ்.ஐ. வந்துட்டுப் போறார்..?"

"அது ஒரு கேஸ் விஷயமா வந்திருக்கார்.."

"அதுக்கு நீ ஏன் வேர்த்து வழியறே..?"

"உன்னாலதான் சந்துரு. உன்னோட தங்கச்சி ரமாவோட சாவுக்கு நான் காரணமில்லைன்னு சொல்ற வரைக்கும் எனக்கு மனசு ஆறாது.."

"சரி.. நான் பண்ணை வீட்டுக்குப் போறேன்.. மத்ததை பின்னாடி பேசுவோம்.." சந்துரு எழுந்தான்.

* * * * *

மறுநாள் காலை பதினொரு மணி.

விஷவாயுக் கிணற்றை மூடும் வேலை ஆரம்பமாகியிருக்க.. வாசுகி மேற்பார்வையில் ஏறக்குறைய 50 பேர்கள் மண்ணைப் போட்டு மூடிக் கொண்டிருந்தார்கள்.

"சின்னய்யா..."

"அம்மா.."

"ராத்திரி பகலுமா வேலை நடக்கட்டும்.. எல்லார்க்கும் வேணுங்கறதைக் கொடு.. காபி.. டிபன்.."

"சரிங்கம்மா.."

"வேலை விறுவிறுன்னு நடக்கணும். இன்னும் அஞ்சு நாள்ல அந்த இடத்துல தோட்டம் போடணும்.."

"ஆகட்டுங்கம்மா..." என்றவன் திரும்பிப் பார்த்து விட்டு, "டாக்டர் வர்றாங்கம்மா.." என்று சொல்லிவிட்டுப் போனான். லட்சுமண் குமார் வேகமாக வந்தான்.

"என்ன வாசுகி.. கிணத்தை மூட ஆரம்பிச்சிட்டீங்க போலிருக்கே..?"



"ஆமா.."

"எனக்கு இது வேண்டாத வேலைன்னு தோணுது.. எவ்வளவு பெரிய கிணறு.." டாக்டர் சொல்ல வாசுகி சோகமாய்ப் புன்னகைத்தாள்.

"ஏன் ரொம்ப டல்லாயிருக்கே வாசுகி...?"

"நம்மைச் சுற்றி நடக்கற விஷயங்கள் எதுவும் சந்தோஷம் தர்றமாதிரி இல்லை.."

"ஓ.. அந்த சந்துரு மேட்டரைச் சொல்றியா.. அவனுக்கு ஒரு முடிவு கட்ற யோசனையோடுதான் வந்திருக்கேன்.."

"என்ன சொல்றீங்க டாக்டர்..?"

"இந்த சந்துருவையும் முடிச்சிடலாம்னு சொல்றேன்.."

"டாக்டர்.."

"அவனோட தங்கச்சி ரமா தற்கொலைக்கு நீதான் காரணம்னு அந்தக் கிராமத்து ஜனங்க உம்மேல பழி சுமத்தியிருக்காங்க.. அதையும் மீறி நீ எப்படி நிரபராதின்னு நிரூபிக்கப் போறே..?"

"அதுக்காக..."

"இது ஒண்ணுதான் வழி..."

"............"

"இதோ பார் வாசுகி.. கிணறு வேலை நடந்துட்டு இருக்கும்போதே அவனையும் தூக்கிப் போட்டுட்டா வேலை முடிஞ்சது. யாராவது அவனைக் கேட்டா ஊருக்குப் போயிட்டான்னு சொல்லிடலாம்.."

"சங்கீதா விவகாரமே என்னோட அடி வயித்தைக் கலக்கிட்டு இருக்கு.. அல நம்ம வீட்டுக்கு வந்ததை இந்த ஊர் போஸ்ட்மேன் பார்த்திருக்கார். சந்துருவையும் நாம தீர்த்துக் கட்டும்போது யாராவது பார்த்துட்டா..?"

"தீர்த்துக்கட்டப் போறது நாம இல்லை.."

"வேற யாரு..?"

"விஷம்.."

"விஷமா..?"

"ஆமா. அந்த சந்துருவுக்கு மூணு வேளையும் இங்கிருந்துதானே சாப்பாடு போகுது.."

"ஆமா.."

"இன்னைக்கு ராத்திரி அவனுக்கு அனுப்பற சாப்பாட்டில் நான் தர்ற விஷ மரத்திரையை கலந்துடு. சாப்பிட்டதும் அவன் பரலோகம் போயிடுவான்.. பிணத்தை கிணத்துக்குள்ள தள்ளி மண்ணைப் போட்டு மூடிட்டா பிரச்னை முடிஞ்சது.."

"பண்ணை வீட்லயிருந்து அவனை எப்படிக் கொண்டு வர்றது..?"

"என்னோட கார் இருக்குல்ல.."

"பண்ணையில் சின்னைய்யன் வேற இருக்கானே...?"

"அவனுக்கு ஏதாவது ஒரு வேலை கொடுத்து வெளியூருக்கு அனுப்ப வேண்டியதுதான்.."



"கிணத்தை மூடற வேலை ராத்திரியிலும் நடக்கணும்னு சொல்லியிருக்கேனே.."

"இன்னிக்கு ஒருநாள் வேண்டாம்னு சொல்லிடு.."

"சரி.. வீட்ல பிரதீபா இருக்காளே..?"

"அவளுக்கு பால்ல தூக்க மாத்திரையை கலந்து கொடுத்துடு.."

"டாக்டர். நீங்க சொல்றதைக் கேட்கும்போது எனக்கு பயம் அடி வயத்தைப் பிசையுது.."

"பயந்தா எதிரிகளைச் சமாளிக்க முடியுமா? இந்தா.. இந்த மாத்திரைகளை வெச்சுக்க. வெள்ளையா இருக்கறது தூக்க மாத்திரை. மஞ்சள் விஷ மாத்திரை."

"நான் எட்டு மணிக்கெல்லாம் சாப்பாட்டை கொடுத்து அனுப்பிடறேன்.. நீங்க எத்தனை மணிக்கு பண்ணை வீட்டுக்கு காரோட போவீங்க..?"

"ரெண்டு மணி நேரம் கழிச்சுப் போறேன். அவனைத் தூக்கி கார்ல போட்டுகிட்டு உடனே கிணத்துக்கு வந்து சமாதி ஆக்கிடறேன்.."

தலையை பயமாய் ஆட்டினாள் வாசுகி.

* * * * *

இரவு எட்டு மணி. கிராமமே நிசப்தமாய் அடங்கிப் போய்க் கிடக்க - சின்னைய்யன் டிபன் காரியரோடு பண்ணை வீட்டுக்குள் நுழைந்தான். டிரான்சிஸ்டர் ரேடியோவை திருகிக் கொண்டிருந்த சந்துரு திரும்பினான்.

"அ... சாப்பாடு வந்தாச்சா..?"

"அய்யாவுக்கு இன்னைக்கு அருமையான சாப்பாடு. சுடச்சுடச் சோறும் கோழிக் குருமாவும். மிச்சம் வைக்காம அம்மா சாப்பிடச் சொன்னாங்க.."

"எனக்கும் இன்னைக்கு எமப்பசி சின்னைய்யா. சாயந்திரம் ஊர் மலைக்கோயில் மேல ஏறிட்டு வந்தேன்."

"அய்யா. நீங்க சாப்பிட்டு ரெஸ்ட் எடுங்க.. நான் அவசரமா திருப்பூர் வரைக்கும் போக வேண்டியிருக்கு. எட்டரை மணி பஸ்ஸை விட்டா அப்புறம் ஒன்பதரை பஸ்தான்.."

சந்துரு ஆச்சர்யமாய் நிமிர்ந்தான். "அப்படின்னா இன்னைக்கு நீ பண்ணைல படுக்கலையா?"

"இல்லிங்கய்யா..?"

"எதுக்காக திருப்பூர் போறே..?"

"அங்கே அம்மாவுக்குச் சொந்தமான எலுமிச்சை தோட்டம் இருக்கு. இன்னிக்கு ராத்திரியே காய் பறிப்பு வேலை நடக்குதாம். இருந்து லாரியில லோட் பண்ணிட்டு வரணுமாம்.."

"ஏதோ கிணறு மூடற வேலை விடிய விடிய நடக்குதுன்னு சொன்னே..?"

"சொன்னேன்.. அம்மா இன்னிக்கு வேண்டாம். நாளைக்குப் பண்ணிக்கலாம்னு சொல்லிட்டாங்க. கொஞ்ச நாளாகவே அம்மா நிதானத்துல இல்லை. நினைச்சு நினைச்சு



காரியம் பண்றாங்க. சரி நான் கிளம்பறேன்..." சின்னய்யன் தலையில் கட்டியிருந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைத்தபடியே வெளியேறினான். சந்துரு மூக்கை உறிஞ்சியபடியே டிபன் காரியரின் தலைமேல் கையை வைத்தான். "அம்மாடி.. கோழிக்குழம்பு வாசனை ஊரையே தூக்கும்போலிருக்கே.." வாய்விட்டுச் சொன்னவன் டிபன் காரியருக்கு முன்னால் சம்மணம் போட்டு உட்கார்ந்தான்.

ராத்திரி மணி ஒன்பது.

தூக்க மாத்திரையை பாலில் கலந்து எடுத்துக் கொண்டு பிரதீபாவின் அறைக்குள் நுழைந்தாள் வாசுகி. பிரதீபா பாடப்புத்தகம் ஒன்றில் குறிப்புகள் எடுத்துக் கொண்டிருந்தாள். சித்தி உள்ளே வந்ததும் வைத்து விட்டு நெட்டி முறித்தாள்.

"பாலைக் குடி பிரதீபா.."

"ம்.."

"என்ன சித்தி.. ரொம்ப டல்லாருக்கே..?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை.. ரெண்டு நாளாவே உங்கப்பா ஞாபகம் வருது.. அதான்.. நீ பாலைக் குடிச்சிட்டு ரொம்ப நேரம் முழிச்சிட்டிருக்காதே.. நீ இப்ப கல்யாணப் பொண்ணு..."

"ம்.." வாசுகி நீட்டிய பால் தம்ளரை வாங்கி அப்படியே வாயில் கவிழ்த்துக் கொண்டாள். டம்ளரை வாங்கிக் கொண்டு நகர்ந்தாள் வாசுகி. பத்து நிமிடம் கழித்து வந்து பார்த்த போது பிரதீபா மேசையின்மேல் கவிழ்ந்து

படுத்துக் கிடந்தாள். அவள் தோளைத் தொட்டு உசுப்பினாள் வாசுகி.

"பிரதீபா.."

"........"

"பிரதீபா.."

"ம்.."

"எழுந்து கட்டில்ல படுத்துக்கோம்மா.."

"ம்..ம்.." அதற்குமேல் அசைவில்லாதால் அவளை அப்படியே கைத்தாங்கலாகக் கொண்டு சென்று கட்டிலில் கிடத்திவிட்டு ஒரு புன்னகையோடு வெளியே வந்தாள்.

* * * * *

**ல**ட்சுமண்குமார் காரை பண்ணையின் ஆஸ்பெட்டாஸ் கட்டிடத்துக்குப் பின்னால் இருட்டில் நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினான். மணிக்கட்டில் மின்னிய வாட்சைப் பார்த்தான்.

நேரம் 10.30 மணி.

பண்ணையின் வேலியை ஒட்டியபடி நடந்துபோய் உள்ளே எட்டிப் பார்த்தான். ஒரு அறையில் வெளிச்சம் தெரிந்தது. கதவு லேசாய்த் திறந்திருக்க - எரிந்து கொண்டிருந்த அரிக்கேன் விளக்கு காற்றில் ஆடியது.

லட்சுமண்குமார் கதவை மெதுவாகத் தள்ளி தலையை மட்டும் உள்ளே நுழைத்து எட்டிப் பார்த்தான். அறையின் நடுவே வாயில் நுரைதள்ளி சந்துரு மல்லாந்து கிடந்தான்.

லட்சுமண்குமார் சந்துருவை நெருங்கி



நாசியருகே கை வைத்துப் பார்க்க மூச்சு நின்றிருந்தது.

சந்தோஷம் மனதில் ஒட்டிக் கொள்ள எழுந்து வெளியே வந்து காரை நோக்கிப் போய் அதை எடுத்துக் கொண்டு வந்தான். காரின் பின்பக்கக் கதவைத் திறந்து வைத்து விட்டு உள்ளே போய் சந்துருவை தரதரவென்று இழுத்து வந்து உள்ளே போட்டான். கதவைச் சாத்திக் கொண்டு பின்சீட்டுக்கு வந்து காரை நகர்த்தினான்.

கார் நிதான வேகத்தில் ஓடி வாசுகியின் வீட்டுக்கு முன்னால் நின்றபோது மணி 11.00. வாசல் கதவருகே இருட்டில் காத்திருந்தாள் வாசுகி. காரைப் பார்த்ததும் வாசற்படி இறங்கி வந்தாள். கிசுகிசுப்பான குரலில் கேட்டாள்.

"என்னாச்சு டாக்டர்..?"

"ஆல் க்ளோஸ்.. பிரதீபா தூங்கறாளா..?"

"ம்.. *சீக்கிரமா* இறக்குங்க.."

லட்சுமண்குமார் காரின் பின்சீட்டிலிருந்த சந்துருவை இறக்கி அவனுடைய தளர்ந்த உடம்பை மணலில் தரதரவென்று இழுத்தபடி வீட்டின் பின்பக்கத்தை நோக்கிப் போனான்.

வாசுகி தவிப்பாய் பின் தொடர்ந்தாள். கொட்டடியில் இருந்த மாடுகள் தலையசைக்க கழுத்து மணிகள் ஒலித்தன. லட்சுமண்குமாருக்கு மூச்சிரைத்தது. சுவாரோரமாய் கொட்டியிருந்த இருட்டில் சந்துருவின் உடம்பைக் கிடத்தி விட்டு மூச்சு வாங்கினான்.

"வாசுகி.. தொண்டையெல்லாம் காய்ஞ்சு போச்சு.. குடிக்கக் கொஞ்சம் தண்ணி கொண்டு வாயேன்.."

"இருங்க கொண்டு வர்றேன்.."

வாசுகி வீட்டுக்குள் ஓடினாள். ஹாலின் சுவரோரமாய் இருந்த ஃப்ரிட்ஜைத் திறந்து தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கொண்டு திரும்பியவள் அதிர்ந்தாள்.

பிரதீபா அவளுடைய அறை வாசலில் நின்றிருந்தாள்.

அந்த ராத்திரி நேரத்தில் மார்புக்குக் குறுக்காகக் கைகளைக் கட்டிக் கொண்டு கதவில் சாய்ந்தபடி மந்தகாசமாய்ப் புன்னகைக்கும் பிரதீபாவைக் கண்டு அதிர்ந்து போனாள் வாசுகி. தொண்டைக்குள் ஜலதரங்கம் வாசித்தது.

"பி..பி..பிரதீபா.. நீ..நீ..நீயா..?"

"நானேதான். என்னடா பால்ல தூக்க மாத்திரை கலந்து கொடுத்தோமே.. இவ தூங்காம இப்படி வந்து நிக்கறாள்னு பார்க்கறியா சித்தி.. நீ பாலில் கலந்தது தூக்க மாத்திரை இல்லை. வைட்டமின் பி."

"பி....பி...பிரதீபா.."

"சித்தி. உன்னோட நடவடிக்கைளை கடந்த நாலு நாளாகவே நான் உன்னிப்பா கவனிச்சிட்டு வர்றேன்.. நேத்திக்கு நான் காலேஜ் போகவே இல்லை. முன்வாசல் வழியாப் போயி பின்பக்க வழியா உள்ளே புகுந்து பெட்ரூம்ல இருக்கற இந்த



பீரோவுக்குப் பின்னாடி ஒளிஞ்சிட்டேன். எனக்கு புருஷனா வரப்போற அந்த ராஸ்கலும், நீயும் அடிச்ச கூத்தைப் பார்த்தேன்.."

வாசுகி ஜன்னல் அருகே வேகவேகமாய் ஓடிப்போய் வீட்டின் பின்பக்கம் பார்த்து பதட்டமாய்க் குரல் கொடுத்தாள்.

"லட்சுமண்.."

"என்ன வாசுகி..?"

"நிலைமை விபரீதம்.. கொஞ்சம் உள்ளே வாங்க.." லட்சுமண்குமார் சந்துருவின் உடம்பை அப்படியே போட்டு விட்டு அவசரமாக உள்ளே ஓடி வந்தான். பிரதீபாவைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போய் நின்றான்.

பிரதீபா புன்னகையின் பரப்பளவை பெரிதாக்கினாள்.

"வாங்க மாப்பிள்ளை சார்.. இந்த ராத்திரி நேரத்துலகூட எங்க வீட்டு மாடுகளுக்கு வைத்தியம் பார்க்க வந்தீங்களா..?" லட்சுமண் வியர்த்த முகத்தோடு வாசுகியைப் பார்க்க அவள் இடறலான குரலில் சொன்னாள்.

"பிரதீபாவுக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கு.."

பிரதீபா ஓரடி முன்னால் வந்தாள்.

"தப்பு சித்தி. எனக்கு எல்லா விஷயமும் தெரியாது. உனக்கும் டாக்டருக்கும் இருக்கற கள்ள உறவு தெரியும். நம்ம வீட்டுக்கு ஒரு பொண்ணு வந்தது தெரியும்.. எனக்குத் தெரிஞ்ச லிஸ்ட் இதுதான்.."

லட்சுமண்குமார் அவளை நோக்கி வந்தான். மெல்ல சிரித்தான்.

"என்னை துப்பறியும் வேலை பார்க்கறியா?"

"இல்லேன்னா உன் துப்புக்கெட்ட சமாச்சாரம் எனக்குத் தெரிஞ்சிருக்குமா? நீயெல்லாம் ஒரு டாக்டரா..? த்தூ.."

"ஏய்.. மரியாதையாப் பேசுடி.."

"உனக்கெல்லாம் என்னடா மரியாதை.. மிஸ்டர் பொம்பளைப் பொறுக்கின்னே கூப்பிடலாமா?"

"என்னடி சொன்னே..?"

கையை ஓங்கிக் கொண்டு வந்தான் லட்சுமண்குமார். பிரதீபா கையமர்த்தினாள். இடது கையை இடுப்பின் மறைவுக்குக் கொண்டு போய் வெளியே எடுத்தாள். கையோடு ரிவால்வர் வந்தது. உயர்த்தினாள். லட்சுமணன் பின்வாங்கினான்.

"மிஸ்டர் பொறுக்கிக்கும், மிஸஸ் கற்புக்கரசியான என் சித்திக்கும் என் ரிவால்வரைப் பத்தி நல்லாவே தெரியும். இது எங்கப்பா வாங்கி வெச்சது.. இன்னிக்கு எனக்கு உபயோகப்படுது.."

வாசுகியும், லட்சுமணனும் வியர்த்து வழிந்துகொண்டே ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"சினிமாவுல கதையில வர்ற மாதிரி.. என் கையில் இருக்கற துப்பாக்கியை தட்டிவிட முயற்சி பண்ணினா அது பலிக்காது. என்னை



நோக்கி ஒரு அடி எடுத்து வெச்சாலும் இந்த ரிவால்வர் குண்டைக் கக்கிடும். மரியாதையா ரெண்டு பேரும் போய் அந்த நாற்காலியில உட்காருங்க.."

அவர்கள் அசையாமல் நிற்க, பிரதீபா உறுமினாள்.

"சொல்றது காதுல விழலை..?"

வாசுகியும், லட்சுமணனும் மெல்ல நடந்து போய் நாற்காலியில் உட்கார்ந்தார்கள்.

"ரெண்டு பேர்ல நான் யாரைக் கேட்கறேனோ.. அவங்க மட்டும் பளிச்னு உண்மையான பதிலைச் சொல்லணும்.. பொய் சொன்னாலோ.. பேசாம இருந்தாலோ.. துப்பாக்கியில இருக்கற தோட்டா உங்களை குசலம் விசாரிக்க வரும்."

இரண்டு பேரும் அவளையே பார்த்தார்கள்.

"சித்தி. தலையணையில ரத்தம் எப்படி வந்தது?"

"அ-அ-அது சங்கீதாவோட ரத்தம்.."

"சங்கீதாவா.. யாரவ..?"

"லட்சுமணுக்குத் தெரியும்.."

"ஓ.. இது மிஸ்டர் பொறுக்கியோட டிபார்ட்மெண்ட்டா? பொறுக்கி சார்.. யாரவ..?"

"என்னோட..."

"காதலியா..?"

"ம்.."

"அடப்பாவி.. எனக்கு முன்னாடியே ஒருத்தியை லவ் பண்ணியிருக்கியா.. சரி. அவளை என்ன பண்ணீங்க..?"

லட்சுமண் சிரித்துக் கொண்டே எழுந்தான். "இதோ பார் பிரதீபா. இந்த மிரட்டலெல்லாம் என்கிட்ட வேண்டாம். அவளைக் கொன்னது நாங்கதான். பாழடைய கிணத்துல போட்டதும் நாங்கதான். உன்னால என்ன பண்ண முடியும்...?"

"குட். இந்த வாக்குமூலம்தான் எனக்கு வேணும். இப்ப நீ என்ன பண்றே... பொடி நடையா டெலிபோனுக்குப் பக்கத்துல போய் போலீசுக்கு டயல் பண்ணி அவங்களை இங்கே வரச் சொல்றே..."

டெலிபோனுக்குப் பக்கத்தில் போன லட்சுமண் திடீரென்று கீழே இருந்த டெலிபோனை எடுத்து அவளை நோக்கி வீச... அது பிரதீபாவின் கையில் இருந்த துப்பாக்கியைக் கீழே தள்ளியது. கீழே விழுந்த துப்பாக்கியை வாசுகி ஓடிப்போய் எடுத்துக் கொள்ள லட்சுமண்குமார் சிரித்தான்.

"சினிமாவில் வர்ற மாதிரியே ஆயிடுச்சு பாத்தியா பிரதீபா..?"

பிரதீபா இப்போது பின்வாங்கினாள். வாசுகியும், லட்சுமணும் சிரிப்போடு அவளை நோக்கிப் போனார்கள்.

"விஷ வாயுக் கிணத்துக்கு ரெண்டு பலி போதும்னு நினைச்சோம். ஆனா இப்போ போனஸா மூணாவது பலி கேட்கும் போலிருக்கே! கொடுத்துடலாம்.."



"சித்தி.."

"என்னடி சித்தி.. கையில ரிவால்வர் இருந்தப்போ என்ன ஆட்டம் போட்டே... இப்போ நான் சொல்றபடி நீ கேட்கணும்.. போய் அந்த மேஜைக்கு முன்னாடி உட்கார்."

பிரதீபா நடுங்கிக் கொண்டே மேஜையை நோக்கிப் போய் நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"என்னடி யோசிக்கறே..? வேற ஏதாவது கோல்மால் பண்ணலாம்னு பார்க்கறியா.. நிச்சயமா நடக்காது. திருதிருன்னு முழிக்காம டேபிள்மேல இருக்கற ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்துக்க.."

"எ..து..க்..கு..?"

"கேள்வி கேட்காதே.. எடுத்து நாங்க சொல்றபடி எழுது.."

பிரதீபா யோசித்தாள்.

"நான் சொல்றபடி எழுது.. என் அன்புள்ள சித்திக்கு. இந்தக் கல்யாணம் எனக்குப் பிடிக்கவில்லை. எனவே நான் எனக்குப் பிடித்தமானவரோடு போகிறேன். என்னைத் தேட வேண்டாம். போலீசிலும் புகார் கொடுக்க வேண்டாம். அப்பாவின் ஆசியோடும், உங்கள் ஆசியோடும் நான் என்றும் சந்தோஷமாக இருப்பேன். டாக்டர் மிகவும் நல்லவர். அவரிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு பிரதீபா. இந்த மாதிரியெல்லாம் எழுதுடி.."

பிரதீபா மருண்ட பார்வையோடு எழுதத் தொடங்கினாள்.

# 16



**"ம்..** *சீக்கிரமா எழுதுடி..*"

"வாசுகி.. நீ இவகிட்ட லெட்டரை எழுதி வாங்கு. அதுக்குள்ள நான் சந்துருவோட பாடியை கிணத்துக்குள்ள போட்டுட்டு வர்றேன்.."

வாசுகி தலையாட்டினாள். "சரி. போய் சீக்கிரமா காரியத்தை முடிச்சிட்டு வாங்க.."

லட்சுமண்குமார் வீட்டினின்றும் மறுபடியும் பின்பக்கம் வந்தான். இருட்டில் மெதுவாய் நடந்து சந்துருவின் உடம்பைக் கிடத்தியிருந்த இடத்துக்கு வந்தான். அதிர்ந்தான். அந்த இடம் வெறுமையாய் இருந்தது.

'இங்கேதானே சந்துருவின் பாடியைப் போட்டோம்.. எங்கே போனது..?'

யோசித்துக் கொண்டிருக்கும்போதே திடீரென்று பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது.

"என்ன டாக்டர்.. என்னையா தேடறீங்க..?"

லட்சுமண்குமார் திடுக்கிட்டுப் போய் திரும்பிப் பார்க்க, பிஸ்டலோடு நின்றிருந்தான் சந்துரு.

"நீ..நீ..நீ...?"

"என்னடா பாக்கறே..? நீயும் வாசுகியும் என்னைக் கொல்றதுக்கு போட்ட திட்டத்தை ரெண்டு நாளைக்கு முன்னேயே பிரதீபா



என்கிட்ட சொல்லிட்டா."

லட்சுமண்குமார் வியர்த்து வழிந்து கொண்டே பின் வாங்கினான். "மரியாதையா வீட்டுக்குள்ள போ.. சத்தம் போட்டே.. சுட்டுடுவேன்.." என்று அவனை உள்ளே தள்ளிக் கொண்டு போனான் சந்துரு.

"வாங்க சந்துரு.. உங்க வருகையைத்தான் நான் எதிர்பார்த்துட்டிருந்தேன்."

"துப்பாக்கி உன்னோட சித்தி கைக்குப் போனப்பவே வந்திருப்பேன். கொஞ்ச நேரம் வேடிக்கை காட்டலாம்னு வெளியே நின்னேன். ஆமா.. அவ சொன்ன மாதிரி லெட்டரை எழுதிட்டியா..?"

"இல்லை.. பாதிதான் எழுதியிருக்கேன்.."

"என்ன வாசுகி அப்படிப் பார்க்கறே..? நீயும் அந்த டாக்டர் பயலும் போட்ட திட்டம் ஒரு ஃபெய்லியர். உங்க சதித் திட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்டினது பிரதீபாதான்."

சந்துரு பேசிக் கொண்டிருக்கும்போதே வாசுகி குபீரென்று பிரதீபாவின்மேல் பாய்ந்து அவள் நெற்றிப் பொட்டில் ரிவால்வரை வைத்தாள். உறுமினாள்.

"சந்துரு. உன்னோட திட்டம்தான் ஃபெய்லியர். மரியாதையா பிஸ்டலைக் கீழே போடு.. இல்லைன்னா பிரதீபாவோட தலை சிதறும்.."

"என்ன பிரதீபா..?" சந்துரு கேட்டான்.

"பிஸ்டலைக் கீழே போடாதீங்க.."

"போடலைன்னா வாசுகி உன்னைச்

சுடுவாளே..?"

"சுட்டும்.."

வாசகி உறுமினாள். "பிரதீபா. நான் விளையாட்டுக்காக சொல்லலை. சந்துரு பிஸ்டலைப் போடலைன்னா சுட்டுடுவேன்.. ஒன்.. ட்டூ.. த்ரி.."

சந்துரு அசையாமல் நின்றிருந்தான்.

"போர்.. பைவ்.. சிக்ஸ்.."

"சந்துரு பிஸ்டலைக் கீழே போடாதீங்க.."

"செவன்.. எய்ட்.. நைன்.."

"..........."

"டென்." என்று சொல்லி ட்ரிக்கரை அழுத்த ரிவால்வரிலிருந்து காற்றுதான் வந்தது. குண்டு இல்லை.

சந்துரு சிரித்தான். "வாசுகி.. புல்லட் லோடு இருந்தா அது யார்கிட்ட இருந்தாலும் ஆபத்துதான்னு எனக்குத் தெரியும். அதனாலதான் காலியானதை அவகிட்டக் கொடுத்துட்டு லோடு பண்ணினதை நான் வெச்சிட்டு இருக்கேன்.. இதுல சைலன்சர் வேற.. சத்தமே வராது.. ஆனா குண்டு வரும்.."

வாசுகியும், லட்சுமணும் உச்சபட்சமாய் வியர்த்தார்கள். வாசுகி உலர்ந்து போன உதடுகளோடு நாக்குழறினாள்.

"நா.. நா திருந்திட்டேன்.. என்னை ஒண்ணும் பண்ணிடாதே.. சந்துரு...."

"அதாவது சுட்டுடாதேன்னு சொல்றே.."



"ஆ..ஆமா.."

"அப்படின்னா.. ஒரு லெட்டரை எழுதி வெச்சிட்டு, உன் கள்ளக்காதலன் டாக்டரைக் கூட்டிட்டு ஊரைவிட்டே போய்டு.."

"அ..அது.. இந்த ஊர்க்குத் தெரிஞ்சா அவமானமாச்சே.."

"அப்போ.. ஆளுக்கொரு தோட்டாவை வாங்கிட்டு செத்துடுங்க.. கிணத்துக்குள்ளே ரெண்டு பேரோட பொணத்தையும் தூக்கிப் போட்டு மூடிடறேன்.. விஷயம் வெளியே வராமலே புதைஞ்சு போயிடும்.."

லட்சுமண்குமார் குறுக்கிட்டுக் கத்தினான். "வேண்டாம். நாங்க லெட்டர் எழுதி வெச்சிட்டு ஏதாவது ஒரு ஊருக்குப் போயிடறோம்.."

"குட்.. இது புத்திசாலித்தனமானது. பாத்தியா வாசுகி. இந்த தைரியம்கூட உனக்கில்ல.. இவனுக்கு கைவசம் ஒரு தொழில் இருக்கு.. கண்டிப்பா வேலை கிடைக்கும்.."

வாசுகி தயங்கினாள். சந்துரு உறுமினான். "நீ இப்போ லெட்டர் எழுதறியா.. இல்ல.. தோட்டாவை வாங்கிக்கறியா..?"

"எ..எழுத..றேன்.."

"எழுது.. மேஜைமேல பேனாவும், பேப்பரும் இருக்கு.. நிறுத்தி நிதானமா எழுது.. நான் சொல்றபடி எழுது.. அன்புள்ள பிரதீபாவுக்கு.. உன் சித்தி எழுதுவது.. டாக்டர் லட்சுமணுடன் எனக்கு பழக்கம் உள்ளதால் அவரை உனக்கு விட்டுக் கொடுக்க என்னால் இயலாதபடியால்

நானும், அவரும் இந்த ஊரை விட்டே போகிறோம். எங்களை மன்னித்து விடு.. போலீசில் புகார் கொடுக்கவோ, எங்களைத் தேடவோ முயற்சிக்க வேண்டாம்.. இப்படிக்கு உன் அன்பு சித்தி வாசுகி.."

சந்துரு சொல்லச் சொல்ல வாசுகி எழுதி முடித்தாள். "பிரதீபா வாங்கிப் படிச்சுப் பாரு.."

பிரதீபா வாசுகியின் கையிலிருந்த லெட்டரை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு "சரியாக இருக்கு" என்றாள்.

சந்துரு லட்சுமணிடம் திரும்பி "உன்னோட இல்லாளைக் கூட்டிக் கொண்டு கிளம்பு..." எனச் சொல்ல, இருவரும் பின்புற வாசலை நோக்கித் தயங்கித் தயங்கிச் செல்ல – சந்துருவின் ரிவால்வரை உயர்த்தினான். பிரதீபா கத்தினாள். "சந்துரு வேண்டாம்.."

ஆனால் சந்துரு சுட்டான். வாசுகியும், லட்சுமணும் முதுகுகளில் விழுந்த ரத்தப் பொத்தல்களோடு முன்பக்கமாய் மடங்கி விழுந்தார்கள்.

"நோ.. பிரதீபா.. இந்த ரெண்டுமே நாகப் பாம்புக. என்னோட தங்கச்சி ரமாவை தற்கொலை பண்ணிக்கற நிலமைக்கு ஆளாக்கினவ இந்த வாசுகி. அவ உயிரோட இருக்கறது நியாயமில்லை. தன்னைக் காதலிச்ச சங்கீதாவை அநியாயமா கொன்னு கிணத்துல தூக்கிப் போட்டவன் இவன். இவனுக்கும் உயிரோட இருக்கற அருகதை கிடையாது. இந்த ரெண்டு பேரையும் அந்தக் கிணத்துல தூக்கிப் போட்டுட்டாப் போதும்.



சனியன் தொலைஞ்சதுன்னு நிம்மதியா இருக்கலாம். ஊரை நம்ப வைக்க இந்த லெட்டர் இருக்கு.."

பிரதீபா பயமாய் எச்சில் விழுங்கினாள்.

"இ..இது.. குற்றமில்லையா சந்துரு...?"

"குற்றம்தான். ஆனா நியாயமான குற்றம். இவங்க போலீஸ்ல மாட்டினா நியாயமா என்ன தண்டனை கிடைக்குமோ அதை நானே கொடுத்திருக்கேன். கொலை பண்றது குற்றம்தான். ஆனா இவங்க ரெண்டு பேரையும் கொன்னது வணக்கத்துக்குரிய குற்றம். உனக்கும் எனக்கும் மட்டும் தெரிஞ்ச குற்றம். எத்தனை வருஷமானாலும் யாராலும் கண்டே பிடிக்க முடியாத குற்றம்."

(முற்றும்)

"உங்க வீட்டுக்காரர் என்ன 'டீ' உபயோகிப்பார்..?"

"மாட்டு வண்டி.."

***- சண்.மாரியப்பன், புதுக்கோட்டை-1***

*****

"உன் பையன் வேலைவெட்டி இல்லாம சும்மா தெருவுல சுத்திட்டிருந்தானே..? இப்ப என்ன பண்றான்..?"

"இப்பவும் அப்படித்தாங்க சுத்திகிட்டு இருக்கான்.. ஆனா பிரயோஜனமா கூரியர் சர்வீஸ் பண்றான்..!"

***- மூர்த்தி, சத்தியமங்கலம்-2***